பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | மாசி 21 | செவ்வாய்க்கிழமை 05.03.2019 | கதிர் 121

**இனிது ரகசியம் அல்ல!**

எனக்கு மிகப் பரிச்சயமான - ஓரளவுநெருங்கியநண்பரான - ஒரு டாக்டர் நேற்று மாலை அலுவலகத் துக்கு வந்தார்.

எடுத்த எடுப்பிலேயே *"நீங்கள் செய்தி பிரசுரிக்கலாம். செய்தி பிரசுரிக்கக்கூடாது. அது தவறு"* - என்றார். பக்கம் 02 »



திருக்கோணேஸ்வரத்தில் 55அடி உயர சிவன் சிலை

உள்ளே பக். 03



கூட்டமைப்பு போன்று இரட்டை வேடம் தரித்து தமிழரை ஏமாற்றுவாரா...?

உள்ளே பக். 08

இலங்கையைப் பழி தீர்த்த தென்னாபிரிக்க அணி

உள்ளே பக். 10



# 8ஆம் திகதி கோட்டா அரசியல் பிரவேசம்!

## குழப்பங்களுக்கு முடிவுகட்ட மேடையில் மஹிந்த, பஸில், வாசுதேவ, வெல்கம!!

கொழும்பு, மார்ச் 05

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 8ஆம் திகதி அரசியல் அரங்கில் அறிமுகமாகவுள்ளார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. பக்கம் 11 »



## இன்று பட்ஜெட்!

கொழும்பு, மார்ச் 05

2019 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் வரவு - செலவுத் திட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் பக்கம் 11 »

## வலி.வடக்கில் 20 ஏக்கரை விடுவித்தது இராணுவம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 05

வலிகாமம் வடக்கில் இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்த காணிகளில் பொது மக்களுக்குச் சொந்தமான 20 ஏக்கர் காணிகள் நேற்றுத் திங்கட்கிழமை பக்கம் 11 »

## காணிகள் விடுவிப்பை விரைவுபடுத்துங்கள்!

### யாழ். தளபதியிடம் ஆளுநர் வலியுறுத்து



யாழ்ப்பாணம், மார்ச் 05

யாழ். மாவட்டத்தில் படையினரின் வசமுள்ள தனியார் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன பக்கம் 11 »



## திருக்கேதீஸ்வரம் ஆலய வீதி வளைவு நேற்று உடனடியாகவே மீள அமைப்பு

### மன்னார் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய

மன்னார், மார்ச் 05

திருக்கேதீஸ்வரம் ஆலய வீதி வளைவை சிவராத்திரி வழிபாட்டை முன்னிட்டு உடனடியாகவே மீளவும் அமைக்குமாறு மன்னார் பதில் நீதிவான் கயஸ் பல்டானோ பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அந்த வளைவை நான்கு நாள் பக்கம் 11 »

### இறப்புச் சான்றிதழ் பெறுமாறு

## காணாமற்போனோரின் உறவுகளுக்கு அழுத்தம்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 05

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் காணாமலாக்கப்பட்டவர்களின் இறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பக்கம் 11 »

## கத்தோலிக்கர் என்ற வகையில் வெட்கித் தலைகுனிகின்றோம்

### திருக்கேதீஸ்வரம் வீதி வளைவு உடைப்புக்கு யாழ். மறை மாவட்டத் திருச்சபை கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 05

திருக்கேதீஸ்வரம் ஆலய வீதி வளைவு சேதமாக்கப்பட்ட நிகழ்வுக்கு எமது அதிர்ச்சியையும், கவலையையும், கண்டனத்தையும் தெரிவிக் பக்கம் 11 »

## சிவராத்திரி வளைவு உடைப்பு: கூட்டமைப்பு கடும் கண்டனம்!

யாழ்ப்பாணம், மார்ச் 05

இந்து மக்களின் புனித தினமான மகா சிவராத்திரி விரதத்தின் முதல் நாளன்று ஐந்து பக்கம் 02 »

## படையினருடன் புலிகளை சமதையாக மதிப்பிடுவதா?

### ஜீ.எல். பீரிஸ் கடும் சீற்றம்



கொழும்பு. மார்ச் 05

விடுதலைப் புலிகள் அமைப்புடன் இராணுவத்தினரைச் சமனாக மதிப்பிடுவதை ஆளும் தரப்பினர் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெர பக்கம் 11 »

## மாகாண சபைத் தேர்தலுக்கு தயாராகி வருகிறது ஐ.தே.க.!

கொழும்பு, மார்ச் 05

மாகாணசபைகளுக்கான தேர்தல் விரைவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் பக்கம் 11 »

## தனி நாட்டுத் திட்டத்திலேயே உள்ளது தமிழ்க் கூட்டமைப்பு

### சாடுகின்றார் வாசுதேவ



கொழும்பு, மார்ச் 05

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனி நாடு அமைக்கும் திட்டத்திலேயே இன்னமும் உள்ளதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பக்கம் 02 »

## கிழக்கில் 19 ஆம் திகதியன்று முழு அடைப்புக்கு அழைப்பு

மட்டக்களப்பு, மார்ச் 05

கிழக்கில் எதிர்வரும் 19ஆம் திகதி கடையடைப்பு போராட்டம், முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அன்றைய தினம் இடம்பெறும் கவனயீர்ப்பு பக்கம் 02 »

## மாவையை மெச்சுகிறார் சுரேஷ்!

### ஜெனீவா விவகாரத்தில் அவரின் நிலைப்பாட்டுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 05

ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தை ஒட்டி இலங்கை விவகாரம் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சி பக்கம் 02 »

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

காலைக்கதிர் Kalaikathir



# 5 விளையாட்டு வீரர்கள் விபத்தில் சிக்கி காயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 05

மறவன்புலவில் நேற்று பிரதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றச் சென்றவர்கள் விபத்தில் சிக்கியதில், ஐவர் காயமடைந்தனர். தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளின் எல்லே போட்டிகள் கைதடி சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

ஆண்களுக்கான போட்டியில் கலந்து கொள்ள மறவன்புலவில் உள்ள விளையாட்டுக் கழக வீரர்கள் மோட்டார் சைக்கிளில் சென்றனர். மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று சிக்கி விபத்துக்குள்ளாகின. அவற்றில் பயணித்த ஐவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துமவனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

## மாவையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்த கருத்துக்களை வரவேற்றுப் பாராட்டியிருக்கின்றார் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

"இலங்கைக்கு ஜெனீவாவில் மேலும் கால நீடிப்பு வழங்கக் கூடாது என்ற கருத்தை மாவை சேனாதிராசா வெளிப்படையாகக் கூறியிருக்கின்றார்.

"இது விடயத்தில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் கூட்டி நாம் ஒரு பொதுவான நிலைப்பாட்டுக்கு வரவேண்டும், அனைத்துக் கட்சிகளுடனும் உடன்பாடு கண்டு ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்றும் மாவை சேனாதிராசா கூறியிருக்கின்றார்.

"இவ்வாறு கருத்து வெளியிட்டமைக்காக மாவையை மெச்சுகின்றோம். அந்தக் கருத்தியல் நிலைப்பாட்டில் அவர் உறுதியாக நின்று நடவடிக்கை எடுப்பார் என நம்புகிறோம்" - என்றும் சுரேஷ் பிறேமச்சந்திரன் நேற்றிரவு 'காலைக்கதிர்' நாளிதழுக்குத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"ஜெனீவா விடயத்தை ஒட்டி ரெலோ கூட்டிய கூட்டத்தில் பல கட்சியினரும் பங்கு கொண்டனர்.

"இலங்கைக்குக் கால அவகாசம் வழங்கக்கூடாது, இப்பிரச்சினையை ஐ.நா. பொதுச் சபை ஊடாக சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பன போன்ற தீர்மானங்கள் அங்கு எடுக்கப்பட்டன. அக்கூட்டத்தில் பங்குபற்றிய சித்தார்தன் போன்றோரும் அதற்கு இணங்கினர்.

"அதே கருத்தை செல்வத்தின் ரெலோவும் கொண்டிருக்கின்றது. தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் அதே நிலைப்பாட்டில் உள்ளார் என்பதைப் பத்திரிகைச் செய்தி மூலம் அறிந்தோம்.

"எனவே, மாவை சேனாதிராசா கூறியமை போன்று ஜெனீவா விவகாரத்தில் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேசி ஒரே நிலைப்பாட்டிற்கு வந்து ஏக முடிவை அறிவிக்கும் தீர்மானத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று எடுக்கும் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம்." - என்றார் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு விளங்கவில்லை. ஆழ்ந்த இந்துமதக் கட்டுரைகளை அவ்வப்போது எழுதிக் கொண்டு வருபவர். அவற்றைப் புத்தகங்களாகவும் வெளியிடுபவர்.

*"என்ன சொல்கின்றீர்கள் டொக்டர்?"* - என்றேன்.

*"நீங்கள் செய்திகளைப் பிரசுரிப்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் அவை செய்(கின்ற) தீயாக மாறிவிடக்கூடாது."* - என்று விளக்கினார்.

மன்னார் சம்பவம் மனதில் அலை மோத வந்திருக்கிறார் என்று புரிந்தது.

திடீரென எழுந்து கை தந்தார்.

*'மன்னார் சம்பவத்தைப் பொறுமையோடு கையாண்டிருக்கின்றீர்கள். யுத்த காலத்தில் உங்கள் தலைப்புகளைப் பார்த்திருக்கிறோம். உணர்வைத் தூண்டித் தட்டி எழுப்பும் உங்கள் கைவண்ணத்தை மன்னார் விவகாரத்தில் அடக்கி வாசித்திருக்கிறீர்கள். பட்டறிவு அனுபவம் என்று நினைக்கிறேன். அந்தப் பொறுப்புணர்வைப் பாராட்டவே நேரில் வந்தேன். அது தொடர்பான எனது ஆற்றாமையை உங்களிடம் தான் பகிர முடியும் என்று கருதி வந்தேன்."* - என்றார் அவர்.

*'மதம் மதமாக இருக்க வேண்டும். அது 'மதம்' பிடித்ததாக மாறக் கூடாது."* - என்று குறிப்பிட்ட அவர் மேலும் ஒரு விடயத்தைச் சொன்னார்.

*'முன்னர் தந்தை செல்வாவின் காலத்தில் 'தமிழ்ப் பேசும் மக்களாக' மிக வலிமையோடு இருந்தோம். திட்டமிட்டு, வெற்றிகரமாக முஸ்லிம்களை எங்களிடமிருந்து பிரித்தார்கள். மதம் அதற்கு உதவியது. அதன் பின்னரும் தமிழர்களாக வலுவாய் நின்றோம். வடக்கு, கிழக்காக எம்மை பிளவுபடுத்தினார்கள். உலகமே வியக்கக் கட்டி எழுப்பப் பட்ட எமது ஆயுதப் போராட்ட வரலாறு அந்தப் பிளவினால் அடியுண்டு, அடியோடு நொருங்கிப் போனமையைப் பக்கத்தில் இருந்து பார்த்தவர்கள் நீங்கள். இப்போது எம்மை இன்னும் பல துண்டுகளாக்கச் சதி நடக்கின்றது. வவுனியாவிலும், கிளிநொச்சியிலும் நம்முடன் ஒன்றுபட்டுப் போய் விட்ட மலையகச் சகோதரர்களைப் பிரிக்கச் சதி, வடக்கிலும் கிழக்கிலும் உணர்வாகவும் உயிர்ப்பாகவும் நம்முடன் ஒன்றுபட்டுப் போன கிறிஸ்தவர்களைப் பிரிக்கச் சதி. முன்னர் முஸ்லிம்களை நம்மில் இருந்து பிளக்கப் பயன்படுத்தப்பட்ட அதே மதப்பிளவு இங்கும் பிரயோகிக்கப்படுகின்றது. இது புரியாமல் பொறுப்புள்ள அரசியல் தலைமைகள், உங்களைப் போன்ற ஊடகங்கள், சமய - சமூக நிறுவனங்கள் அதற்கு உடந்தையாகச் செயற்படுகின்றமை விபரீத நிலைமையை ஏற்படுத்தும். என் மனதில் பட்டதைக் கொட்டி விட்டேன். என்னாவது செய்யுங்கள்!"*

- என்ற ஒரே மூச்சில் பேசிவிட்டு எழுந்தார் அந்த யமுனை மைந்தன்.

அவரின் கருத்து நம் வாசகர்களுக்குச் சமர்ப்பணம்.

-மின்னல்-

## சிவராத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈஸ்வரங்களில் ஒன்றான புனித பூமி திருக்கேதீஸ்வரத் தில் அலங்கார வளைவு அடித்துடைக்கப்பட்டிருப்பது மிகுந்த மனவேதனையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவம் கண்டனத்துக்குரிய ஒரு செயலாகும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா.

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மன்னாரில் அமைக்கப்பட்டிருந்த வளைவைக் கத்தோலிக்கர்கள் சிலர் முறைகேடாக அகற்றியமை தொடர்பில் கண்டன அறிக்கை ஒன்றை ஊடகங்களுக்கு அவர் அனுப்பியுள்ளார்.

அவரது கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: -

சைவ மக்கள் திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரிக்கு முதன் நாளே இலட்சக்கணக்கில் குவிந்து விடுவர்.

சிவராத்திரியில் சிவனை இதயத்தில் வைத்துக் கண்விழித்து வழிபாடாற்றி அடுத்த நாள் விடிந்ததும் பாலாவி ஆற்றில் நீராடிய பின் சிவனை வழிபட்டு வீடு திரும்பும் சைவ மக்கள் ஆன்மீக பேறுபெறும் திருத்தலம் திருக்கேதீஸ்வரம்.

அந்தப் புனித பூமியில் நிகழ்ந்த இக் கொடுஞ்செயலால் ஏற்பட்ட பதற்ற நிலையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்; வேதனையடைகின்றோம்.

இச்செயல் இந்து - கிறிஸ்தவ மக்களிடம் வன்முறையையும் பிளவையும் எதிர் விளைவுகளையும் ஏற்படுத்தி விடும் கொடிய செயலாகும். இச்செயற்பாடுகள் தொடர அனுமதிக்க முடியாது.

இச்செய்தி கிடைத்ததும் திருக்கேதீஸ்வர நிர்வாகிகளுடனும் இந்துக் குருக்கள்மாருடனும் கலந்து பேசினோம். மன்னார் ஆயர் கொழும்பில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்ற தகவல் கிடைத்தது. அதனால் அவருடன் பேச முடியவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சம்பவம் இடம்பெற்ற மாந்தைச் சந்திக்கும் திருக்கேதீஸ்வரப் பிரதேசத்திற்கும் சென்று சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் பேசியுள்ளார். அமைதியைப் பேண முயற்சித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சம்பவங்கள் அதுவும் இந்து - கிறிஸ்தவ மத நம்பிக்கை கொண்டு வாழும் மக்களிடையே பிளவை ஏற்படுத்த இடமளித்துவிடாமல் அனைத்து நீதியான சமாதான நடவடிக்கைகளையும் எடுக்க அனைவரும் உதவி ஒத்துழைக்க வேண்டும்.

மன்னார் ஆயர் மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்களும் சைவக் குருமார் தலைவர்களும் உடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த நாம் உதவ வேண்டும்.

பௌத்த ஆதிக்கத்திற்கும் தமிழ் இன அடக்குமுறைக்கும் ஆளாகியிருக்கும் தமிழ் மக்களின் விடிவுக்கும் விடுதலைக்கும் எம்மிடையே நல்லிணக்கம் மிக அவசியமாகும். இவை பாதுகாக்கப்பட வேண்டும். இன்றைய தேவை அதுவேதான் என்பதை வற்புறுத்தி நிற்கின்றோம்- என்றுள்ளது. (ஐ)

## தனி நாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணியினர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ. விக்கினேஸ்வரன் போன்றவர்களின் தூண்டுதலிலே கண்காணிப்பாளர் ஒருவரை நியமிக்கவேண்டும் என்ற கோரிக்கையை ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பு அதிகாரி ஒருவரை நியமிப்பதானது எமது நாட்டின் சுயாட்சி, இறையாண்மையில் தலையிடும் செயலாகும். அதற்கு நாங்கள் ஒரு போதும் இடமளிக்க மாட்டோம்.

தமிழ் மக்களுக்குப் பிரச்சினை இருக்கின்றது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அரசு ஆட்சிக்கு வரும்போது தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்தது. அதனை அரசு நிறைவேற்ற தவறியுள்ளது. அதற்காக இந்த பிரச்சினையை தீர்க்க நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வெளிநாட்டுத் தலையீடுகளை அனுமதிக்க முடியாது - என்றார். (ஐ)

## கிழக்கிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரணியிலும் கலந்துகொள்ளுமாறும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்தப் போராட்டம் தொடர்பாக நேற்று மட்டக்களப்பு ரயில் நிலைய வீதியில் உள்ள இணையம் அலுவலகத்தில் கிழக்கு மாகாண வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் அமைப்பு ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாண வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் அ.அமலநாயகி, அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ரி.செல்வராணி, திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் எஸ். சரோஜாதேவி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துகளை வெளியிட்டனர்.

இந்த போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கிழக்கு, தென் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்ப கல்லூரி, ஆசிரிய பயிற்சி கல்லூரி, ஆசிரியர் சங்கங்கள், பாடசாலை மாணவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஊடக சங்கங்கள், சமயத் தலைவர்கள், இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், வர்த்தகர் சங்கங்கள், அரசியல் கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அன்றைய தினம் வர்த்தகர் சங்கத்தினர் வடக்கு, கிழக்கில் தமது வர்த்தக நிலையங்களை மூடியும் அரச மற்றும் தனியார் போக்குவரத்து சங்கத்தினர் தமது போக்குவரத்துச் சேவைகளை நிறுத்தியும் பூரண ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகள் தமது அரசியல் வேறுபாடுகளை களைந்து இந்தப் போராட்டத்தில் பங்கேற்குமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள மூவின மக்களும் தமது நியாயமாக கோரிக்கைக்கு ஆதரவு வழங்குமாறும் அந்தச் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)

## ஐயரும் ஆயரும்

ஐயரும் ஆயரும்
பைய பைய நடந்து
பரஸ்பரம் பேசுங்கள்.
உங்கள் கொய்யக
துள்ளிருக்கும்
சுக்லாம் பரதரம் விஸ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்புஜம்
பிதாசுதன்பரிசுத்த ஆவியை
அப்பால் தள்ளிவைத்து
மன்னார் புதைகுழியை
மறைக்கப்படும் தமிழர்
வரலாற்றை மீட்க
ஒன்றாய் சேருங்கள்.
பூநூலைத் திரட்டி
திருப்பலியில் திடமாக்கி
முறுக்கி ஒரு வடமாக்கி
இனத்தேரை இழுப்போமாக!
அல்பிரட்டை ஒருநாள்
மண் தின்னும்
மகாலிங்கத்தை ஒருநாள்
தீ எரித்து சாம்பராக்கும்
மூச்சு நின்ற பின்
பிணமிரண்டும்
பிரேதமென்று
அழைக்கப்படும்.
ஆயருக்கும் ஐயருக்கும்
வரலாற்று அடையாளம்
இடையிட்டுவந்தளதுவுமல்ல
இவ்வுலகின் மூத்த குடி
தமிழர் என்பதே
அந்த தங்கக்கிரீடம்.
இனத்திற்கு ஒன்றென்றால்
சூலாயுதத்தோடு
மாதா மாகாளி ஆகட்டும்
மரியாளின் முலையில்
சம்மந்தன் திருவாய்வைத்து
அருந்திப்பாடட்டும்
தோடுடைய செவியன்
நாளைய சந்ததிக்கு
புரட்சிபாவாகட்டும்
அம்பாறை பாறூக்கும்
ஆவரங்கால் கௌரியும்
மன்னார் செபமாலையும்
ஒன்றாய் உறங்குகிறார்கள்
நன்றாய் பாருங்கள்.
சர்ச்சில் அல்ல
செல்வச்சந்நிதியிலும் அல்ல
பெரிய பள்ளியிலும் அல்ல
அந்த பிள்ளைகள்
கல்லறையில் இருப்பது
இனத்தின்
துயிலுமில்லங்களில்
கண் எவருக்கேனும்
மங்கினால்
காவற் தெய்வங்கள் என்ற
மந்திரத்தை
இன்று தொடக்கம்
இரவு பகல் உச்சரியுங்கள்.
நல்ல சேதி வரும்
உங்களை நாடி
நாலுபேருக்கு இதை
பகிருங்கள்.
எங்கள் நிலத்தின்
எல்லை குறுகுகிறதா
என்பதை மட்டும்
எட்டிஎட்டி பாருங்கள்.
மற்றதெல்லாம் மறவுங்கள்
உங்கள்
கொய்யகத்துள்ளிருக்கும்
மதவெறியை கூட்டித்தள்ளி
குப்பையில் போடுங்கள்.
நாம் ஆண்ட தமிழினம்
என்ற அடையாளம் மட்டுமே
எம்மோடு கூடவரும்.

-பொன்காந்தன்-

# தேசிய உடை அணியக்கூடிய ஒருவரே அடுத்த ஜனாதிபதி

## விடாப்பிடி நிலையில் குமார வெல்கம

கொழும்பு, மார்ச் 05

எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதி தேர்தலொன்று நாட்டில் நடத்தப்படுமாயின் அதில் தேசிய உடை அணியக்கூடிய ஒருவரே நிச்சயம் தெரிவு செய்யப்படுவாரென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

களுத்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே குமார வெல்கம இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் மக்கள் விடுதலை முன்னணியும் ஒன்றாக இணைந்து தேர்தலில் போட்டியிடுவதே தற்போதைய சூழ்நிலையில் சிறந்தது.



மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு அஞ்சுகிறது. இதற்கு காரணம் அரசின் மீது மக்கள் விரக்தியில் உள்ளனர். இந்நிலையில் தேர்தலை நடத்தினால் தோல்வியைச் சந்திக்க நேரிடும் என்ற அச்சம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது–என்றார். (ஐ)

# அ'புரம் வைத்தியசாலையில் 64 இலட்சம் ரூபா திருட்டு!

## விசாரணைக்கு 3 பொலிஸ் குழுக்கள்

கொழும்பு, மார்ச் 05

அனுராதபுரம் பொது வைத்தியசாலையில் சுமார் 64 இலட்சம் ரூபா திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக 3 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலை வளாகத்தில் பாதுகாப்புக் கமராக்கள் பொருத்தப்படாமை, விசாரணைகளுக்குப் பாதிப்பாக அமைந்துள்ளதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அநுராதபுரம் பொது வைத்தியசாலையின் நிர்வாகக் கட்டடத்தில் இருந்த பாதுகாப்புப் பெட்டகம் உடைக்கப்பட்டு அதிலிருந்து சுமார் 64 இலட்சம் ரூபா சூறையாடப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. பின்னர் திருடர்கள் அந்தக் கட்டடத்தில் இருந்த சில ஆவணங்களையும் தீயிட்டு எரித்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது. (ஐ)

# திருக்கோணேஸ்வரத்தில் 55அடி உயர சிவன் சிலை



திருகோணமலை, மார்ச் 05

ஈச்சரங்களில் ஒன்றான திருகோணாமலை அருள்மிகு கோணேஸ்வரப் பெருமான் ஆலயத்தில் திருக் கோணேஸ்வரப் பெருமானின் திருவுருவச் சிலை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மஹா சிவராத்திரி திருநாளான நேற்றுக் காலை சுபநேரத்தில் பெருமானின் திருவுருவம், மாவட்டத்தின் முக்கிய அதிதிகளால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உருப்பினர்களான துரைரட்ணசிங்கம், சுசந்த புஞ்சிநிலமே, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டத்தலைவர் குகதாசன் ஆகியோர் கலந்துகொண்டு இந்த உருவச்சிலையைத் திறந்து வைத்தனர்.

55அடி உயரமான இந்தச் சிலையை இந்தியாவைச் சேர்ந்த சிப்பிகள் வடிவமைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனாதிபதிக்கான ஒதுக்கீட்டை தடுக்க இணங்கமாட்டார் ரணில்

## கூறுகின்றார் மஹிந்த



கொழும்பு, மார்ச் 05

2019 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் ஜனாதிபதிக்கான ஒதுக்கீட்டைத் தடுக்கப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணங்கமாட்டார் என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஒதுக்கீட்டை எதிர்க்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ள நிலையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அனுராதபுரத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அவர் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக எந்தவொரு வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டாலும், தமது தரப்பு வெற்றி பெறுவது நிச்சயம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு எதிர்வரும் நாள்களில் புதிதாக எந்தவொரு வாக்கும் அதிகரிக்கப்போவதில்லை எனவும் மஹிந்த மேலும் கூறினார். (ஐ)

# முள்ளிவாய்க்காலில் புலிகளின் 25 இலக்கத் தகடுகள் சிக்கின!



முல்லைத்தீவு, மார்ச் 05

முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் 25 வெவ்வேறு இலக்கத் தகடுகள் நேற்று முன் தினம் மீட்கப்பட்டுள்ளன.

வருடாந்த சிவராத்திரி திருவிழா வழிபாட்டுக்காக நேற்று முன் தினம் முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் ஆலய வளாகம் ஒன்றில் பொதுமக்களால் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது ஆலய வளாகப் பகுதியில் இருந்து விடுதலைப் புலிகளின் 25 வெவ்வேறு இலக்கங்களுடன் தகடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இது தொடர்பில் பிரதேச மக்கள் முல்லைத்தீவுப் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் இறுதிப்போர் நடைபெற்ற ஆலய வளாகப் பகுதி ஒன்றிலேயே இவ்வாறான தகடுகள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மதங்களிடையே மட்டுமல்ல இன நல்லுறவையும் சிதைப்பதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லை

## டக்ளஸ் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 05

மதங்களுக்கிடையில் மட்டுமல்ல இனங்களுக்கிடையில் இருக்கும் நல்லுறவையும் சிதைப்பதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லை. அவ்வாறான சம்பவங்களையும் நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

அந்தவகையில் இலங்கைத் தீவில் அனைத்து மதங்களைச் சேர்ந்த மக்களும் சம உரிமை பெற்றவர்களாக பேதங்களற்று வாழவேண்டும் என்பதே எமது விருப்பமும் நிலைப்பாடும் ஆகும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

எமது நாடு தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள், பறங்கியர்கள் ஆகிய அனைத்து இன மக்களும் சொந்தமென்று கூறி உரிமையோடு வாழவேண்டிய நாடு. இந்துக்களும், கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும், பௌத்தர்களும் சகோதர மக்களாக ஒன்றிணைந்து மகிழ்ச்சியுடன் மனித நேயத்துடன் வாழவேண்டிய மத சார்பற்ற நாடு. இனங்களையும் மதங்களையும் பிரதேசங்களையும் மனித நேயமே ஒரு நாடு என்ற வகையில் ஒன்று சேர்க்கின்றது. ஆனால் அரசியல் மட்டும் தான் அவற்றைப் பிரித்து வைக்கிறது.

இந்த நாட்டில் அனைத்து மதங்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும். இதை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தியும் வருவதுடன் அவ்வாறான நல்லிணக்கத்திற்கு பல முயற்சிகளையும் நாம் கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்திருக்கின்றோம்.

தமிழ் பேசும் மக்களின் பெயரால் தமிழ் பேசும் மக்களையே தினம் தினம் பல்வேறு பிரச்சினைகளுக்கு உள்ளாக்கிவரும் எமது தேசத்தில் இந்துக்களின் சிறப்புமிக்க வழிபாடு நடைபெறும் இத்தருணத்தில் நடந்தேறியுள்ள திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் வளைவு இடித்தழிக்கப்பட்டமை மற்றும் திருக்கோணேஸ்வரர் ஆலய சிவலிங்கம் உடைக்கப்பட்டமை ஆகியன துரதிஷ்டவசமானதொன்றாகும் என்றே கவலையடைகின்றேன்.

மதத்தால் வேறுபட்டாலும் பேசும் மொழியாலும் வாழும் நிலத்தாலும் ஒன்றுபட்டவர்களே தமிழ் பேசும் மக்கள். அந்தவகையில் இந்தச் சம்பவம் நடைபெற்றதற்கான உண்மைகள் கண்டறியப்பட்டு அதற்கான தீர்வு காணப்பட வேண்டும்.

இதற்கான முயற்சிகளை அரசியல் சாரா வகையில் முன்னெடுத்து இந்துமதத்தினது புனிதத்தன்மை பாதுகாக்கப்படுவதுடன் கத்தோலிக்க மத மக்கள் மீது சுமத்தப்படும் பழிகளுக்கும் தெளிவு பெற்றுக் கொடுத்து மதங்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

கிறிஸ்தவர்களது பைபிளோ, பௌத்தர்களின் மஹாவம்சமோ, இஸ்லாமியரின் குர்ஆனோ மற்றும் இந்துக்களின் பகவத் கீதையோ நல்லிணக்கத்தையும் சமத்துவத்தையும் தனித்துவத்தையும் வலியுறுத்தி நிற்கின்றன என்பதை அனைவரும் மனதில் கொள்ள வேண்டும்.

அந்தவகையிலேயே நாமும் இன நல்லிணக்கத்தையும் மத நல்லிணக்கத்தையும் வலியுறுத்தி அதற்காக அயராது உழைத்து வருகின்றோம்–என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online


## உருவேற்றும் ஊடக தர்மம்

தமிழினம் மிக இக்கட்டான ஒரு சூழ்நிலைக்குள் சிக்கிக் கொண்டிருக்கையில் நேற்று முன்தினம் திருக்கேதீஸ்வர மத வன்முறைச் சம்பவம் அரங்கேறியிருக்கின்றது.

திருக்கேதீஸ்வர ஆலய வீதியில் அமைக்கப்பட்ட பெயர் வளைவு உடைத்து நொறுக்கப்பட்டமையும், அங்கு எழுப்பப்பட்ட கோஷங்களும், தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் கூறியுள்ளமை போல ஒட்டுமொத்த தமிழினத்தையுமே வெட்கக்கேட்டுக்கும் சாபக் கேட்டுக்கும் உள்ளாக்கியுள்ளன. தமிழர் ஒற்றுமையை கேள்விக்கும் ஏனைய இனத்தோர் மத்தியில் கேலிக்கும் உள்ளாக்கியுள்ள இந்த நிகழ்வு தமிழர்கள் மத்தியில் மிகப் பெரும் நெருக்கடியை - கேள்விக் குறியை - எழுப்பி நிற்கின்றது.

எல்லா மதங்களும் போதிப்பது அன்பையும், மனித நேயத்தையும் சகிப்புத் தன்மையையும்தான்.

ஆனால், அதே மதங்களின் பெயரைக் கூறிக்கொண்டு சகிப்புத் தன்மையையும் மீறி, நாம் இனமுரண்பாடுகளிலும் மத மோதல்களிலும் ஈடுபடுகின்றமை எத்துணை கொடுமையாகும்?

இறை மறுப்பாளர்கள் கூட செய்யத் துணியாத வன்முறையை - அடாவடியை - ஒரு மதத்தின் பெயராலும் நம்பிக்கையின் பெயராலும் நாம் செய்வோமாயின் அது எவ்வளவு கேவலமானது? அத்தகைய அடாவடிக்குத் தூண்டிய அந்த நம்பிக்கையை அல்லது மதத்தை அல்லவா அது கேள்விக்கும் கேலிக்கும் உள்ளாக்குகின்றது?

ஏற்கனவே நீதிமன்றில் நிலுவையாக இருக்கும் ஒரு விடயத்தை - அதுவும் இரு மதங்கள் சார்ந்த - உணர்வு பூர்வமான - விடயத்தைக் கையாளும்போது மிக்க அவதானத்துடனும், கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் செயற்படுவது மிக மிக முக்கியமாகும். அது விடயத்தில் இரு தரப்புகளிலுமே தவறுகள் இருப்பதாகவே தோன்றுகின்றது. இவ்விடயத்தை ஒட்டி யாழ்ப்பாணம் யாழ். ஆயர் சார்பில் யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் சுட்டிக்காட்டிய ஓர் அம்சத்தை நாமும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

*"அன்பு, மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு, தியாகம், புரிந்துணர்வு, சகோதரத்துவம், குழும வாழ்வு ஆகியவையே இயேசுவின் வாழ்வினாலும் போதனையாலும் கத்தோலிக்க மதம் பெற்றுக் கொண்ட அடையாளங்களாகும். அவற்றை நாம் இழந்து விடாமல் பாதுகாக்க வேண்டும்."* - என்கிறார் யாழ்.ஆயர்.

இதே அன்பையும், சகிப்புத் தன்மையையும், விட்டுக்கொடுப்பையும், தியாகத்தையும், புரிந்துணர்வையும்தான் சைவ மதமும் போதிக்கின்றது.

இந்தப் பூவுலகுக்கே சகிப்புத் தன்மையைப் போதித்த நான்கு உயரிய மதங்கள் இந்தத் தீவில் நிலைகொண்டுள்ளன. பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து சமயம் ஆகிய நான்குமே விட்டுக்கொடுப்பையும், சகிப்புத்தன்மையுமே தமது பெரும் பொக்கிஷங்களாக நமக்குப் போதித்து வழிகாட்டி நிற்கின்றன.

ஆனால், அவற்றின் பெயரால் - அதுவும் ஒரு முக்கிய திருநாள் சமயத்தில் - நமக்குள் மோதல், முரண்பாடு, யுத்தம் என்றால் அது எத்துணை கேவலமானது?

இந்தத் தீவில், வரலாற்றில் மோசமான பேரழிவையும் போரழிவுகளையும் சந்தித்து, திணறி நிற்கும் தமிழினம் தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு சர்வதேசத்திடம் நீதி வேண்டி மன்றாடிக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் நமக்குள் இத்தகைய மோதல் - முரண்பாடு - நம்மை மேலும் பிளந்து கறுவறுத்து, துண்டாக்கும். அத்தகைய மத மாச்சரியம் நமக்குத் தேவைதானா?

இத்தகைய முரண்பாடு ஏற்பட்டதும், அதை உடனடியாகத் தணிவித்து, மத சௌஜயன்யத்தை ஏற்படுத்துவதற்காக விரைந்து செயற்பட்ட யாழ் ஆயர் போன்று, பிற தலைவர்களும், தமது மதம், தமது குழுமம் என்ற நிலை தாண்டி, 'தமிழினம்' என்ற பொது நோக்கில் - தூரநோக்கோடு - தீர்க்கதரிசனத்தோடு - செயற்பட முன்வர வேண்டும் என்று விநயத்துடன் வேண்டுகிறோம்.

இந்தச் சம்பவத்தில் ஒரு தரப்பு இழைத்தவை தவறாகவும், மறுதரப்பின் நடவடிக்கைகள் சரியாகவும் இருக்கலாம். அல்லது இரு தரப்புகளுமே தவறு இழைத்திருக்கலாம். மதத் தலைவர்களும், நீதிமன்றமும் தலையிட்டுத் தீர்வு காண வேண்டிய விடயம் இவை.

ஆனால், நடத்த சம்பவங்களை மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம் என்ற பெயரில் ஊடகங்கள் மூலமும், சமூக வலைத் தளங்கள் மூலமும் மக்களை 'உருவேற்றும்' செயலைச் செய்யாதிருப்பது ஊடக தர்மக் கடப்பாடு என்று நினைக்கிறோம்.

சனியன்று நடந்த சம்பவத்துக்கு யாழ். ஆயர் குறிப்பிடுகின்றமை போன்று பிரயாச்சித்தம் செய்து, மக்களை ஒரு நிலையப்படுத்தி, சமரசத்தை ஏற்படுத்தி விடலாம். ஆனால் அத்தகைய நிகழ்வுகளை செய்தியாக்குகின்றோம் என்ற பெயரில் மக்களை உருவேற்றினால், அது மீளச் சரி செய்ய முடியாத மத முரணிலை நிலைப்பாட்டை நிரந்தரமாக்கிவிடும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இத்தகைய உணர்வுபூர்வமான விடயத்தில் பாதிப்புற்ற தரப்பின் அவலத்தை வெளிப்படுத்துகின்றோம் என்ற பெயரிலோ, அல்லது பாதிப்பை ஏற்படுத்திய தரப்பின் அராஜகத்தை அம்பலப்படுத்துகின்றோம் என்ற பெயரிலோ நமது ஊடகத் திறமையை முன்னிறுத்தி, உண்மையைக் கூறவிழைகின்றோம் என்ற பெயரில், அதிகப்பிரசங்கித்தனம் பண்ணுவது சமுதாய நன்னோக்கிய பாதையில் பேரழிவை - பிராயச்சித்தம் செய்யமுடியாத பின்னடைவை - தந்து விடலாம்.

இதுபோன்ற, உணர்வுபூர்வமான, ஆழமான வடுக்களையும் விளைவுகளையும் சமுதாயத்தில் ஏற்படுத்தக் கூடிய, கொந்தளிப்பான விவகாரங்களைக் கையாள்வதில் ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படுவது அவசியமாகும்.

# திருக்கேதீஸ்வரம் வளைவு பிரச்சினையைத் தீர்க்க குழு

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 05

திருக்கேதீஸ்வரம் ஆலய வளைவு அகற்றப்பட்டமையடுத்து ஏற்பட்டுள்ள மதப் பிரச்சினை அனைத்து மதங்களினுடைய பிரதிநிதிகள் குழுவொன்றை அமைத்துக் கலந்துரையாடல்களை மேற்கொள்வதனூடாகத் தீர்க்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

இந்து குருக்கள் சபையின் தலைவர் சிவஸ்ரீ கே.வீ.கே. வைத்தீஸ்வரக் குருக்கள், ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்று முற்பகல் ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போதே ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஆளுநரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

வடக்கு மாகாணத்தில் மதங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் வடக்கில் இந்துக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

மேலும் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பிலும் கவனம் செலுத்திய ஆளுநர், அனைத்து மதங்களின் பிரதிநிதிகள் குழுவொன்றை அமைத்து கலந்துரையாடல்களை மேற்கொள்வதனூடாக இந்தப் பிரச்சினையை சுமூகமாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தக் குழுவில் இந்து மதத்தை சேர்ந்த மூன்று பேர், கத்தோலிக்க மதத்தை சேர்ந்த மூவர் , பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் , அரச அதிபர் சார்பில் ஒருவர்மற்றும்பொது அமைப்பை சேர்ந்த ஒருவர் உள்ளடங்கலாக மொத்தம் ஒன்பது பேர் கொண்ட குழு அமைக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதன்போது சிவஸ்ரீ கே.வீ.கே. வைத்தீஸ்வரக் குருக்களினால் இந்து ஒளி சஞ்சிகை மற்றும் நந்திக்கொடி ஆகியன ஆளுநரிடம் கையளிக்கப்பட்டதுடன் ஆசீர்வாதங்களையும் வழங்கினார்.

இந்தச் சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் சட்டத்தரணி இ.இளங்கோவன் கலந்துகொண்டார். (ஐ)

# கிளிநொச்சி சிவநகர் மாதிரிக் கிராம வீட்டுத் திட்ட வேலைகள் ஆரம்பம்!



கிளிநொச்சி, மார்ச் 05

கிளிநொச்சி சிவநகர் மாதிரிக் கிராமத்திற்கான வீடமைப்புத் திட்ட வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

தேசிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசாரத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸவால் முன்னெடுக்கப்படும் 'கிராமத்திற்குக் கிராமம் வீட்டுக்கு - வீடு' என்னும் வீடமைப்புத் திட்டத்தினூடாக, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் கோரிக்கைக்கமைவாக கிளிநொச்சி சிவநகர் கிராமத்தில் அமையப்பெறவுள்ள 28 வீடுகளை உள்ளடக்கிய மாதிரிக் கிராமத்திற்கான வீடமைப்புப் பணிகள் நேற்று முன் தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

28 வீடுகளுக்குமான அத்திவாரம் இட்டு வீடுகள் அமைப்பதற்கான ஆரம்பகட்ட நிகழ்வுகள் நேற்று முன்தினம் முற்பகல் 11.00 மணியளவில் கரைச்சிப் பிரதேசசபை உறுப்பினர் க.கணேசலிங்கம் தலைமையில் சம்பிரதாய முறைப்படி நடைபெற்றன.

இந்நிகழ்வில், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட திட்ட முகாமையாளர் த.சுபாஸ்கரன், கிராம அலுவலர் சு.சாரதாம்பாள், சமுர்த்தி உத்தியோகத்தர், தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் சமூக செயற்பாட்டாளர் சுஜீவன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருத்திரபுரம் பிரதேச அமைப்பாளர் பா.எழில்வேந்தன், பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர், வீட்டுத் திட்டப் பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# கிளிநொச்சி தமிழரசு மகளிர் அணியின் பெண்கள் எழுச்சி நாள் வெள்ளியன்று

கிளிநொச்சி, மார்ச் 05

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணியின் ஏற்பாட்டில் 2019ஆம் ஆண்டுக்கான பெண்கள் எழுச்சி நாள் 'வையகம் நோக்கிய வனிதையர் குரல்' என்னும் தொனிப்பொருளில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை, பி.ப.1.00 மணிக்கு கரைச்சி பிரதேசசபையின் மாநாட்டு மண்டபத்தில், கரைச்சி பிரதேசசபை உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணியின் செயலாளருமான திருமதி.கலைவாணி சிறீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி.சிவமங்கை இராமநாதன் , பருத்தித்துறை பிரதேச சபையின் உப தவிசாளர் திருமதி.மதினி நெல்சன், சிறப்பு அதிதிகளாகச் சட்டத்தரணி திருமதி.விஜயராணி சதீஸ்குமார், சட்டத்தரணி செல்வி.தர்சா இராசமகேந்திரன் ஆகியோரும், கௌரவ அதிதிகளாக கிளிநொச்சி மகாவித்தியாலய முதல்வர் திருமதி.ஜெயந்தி தனபாலசிங்கம், கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியின் முதல்வர் செல்வி.அன்ரனி சாந்தா மரியாம்பிள்ளை ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்துறை வளர்ச்சி கண்டுள்ள பெண் சாதனையாளர்களும், பெண் அரசியல் ஆளுமைகளும், செயற்பாட்டாளர்களும் மதிப்பளிக்கப்படவுள்ளனர். (ஐ)

### சிவராத்திரியை முன்னிட்டு

# வர்த்தக ஊழியருக்கு இன்று விடுமுறை வழங்குக!

யாழ்ப்பாணம், பெப். 05

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நேற்றைய தினம் விரதமிருந்த வர்த்தக ஊழியர்கள் நன்மை கருதி இன்று செவ்வாய்க்கிழமை அனைத்து வர்த்தகர்களும் தமது வர்த்தக நிலையங்களை மூடி, அவர்களுக்கு விடுமுறை வழங்கி உதவுமாறு யாழ்ப்பாண வர்த்தகர்களை யாழ் வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (இ)

## நாளை

06.03.2019
புதன்கிழமை

நட்சத்திரம்: சதயம் மு.இ 6.40 வரை
திதி : சித்தமிர்தம் மு.இ 10.22 வரை
சுபநேரம் : 4.55 – 6.25 வரை
இராகுகாலம் : 12.25 – 1.55 வரை

# திருக்கேதீஸ்வரம் மத வன்முறைச் சம்பவம் தமிழர்களுக்கு வெட்கக்கேடு; சாபக்கேடு!

## இதை அனுமதிக்க முடியாது என மனோ சீற்றம்



கொழும்பு, மார்ச் 05

சிவராத்திரியை முன்னிட்டுதிருக்கேதீஸ்வர ஆலய வீதி என அறியப்பட்ட வீதியில் அமைக்கப்பட்ட பெயர் வளைவு மத வன்முறையாளர்களால் உடைத்து நொறுக்கப்பட்டதும், அவ்வேளையில் அங்கு எழுப்பப்பட்ட கோஷங்களும் ஒட்டுமொத்த தமிழினத்தையுமே வெட்கக்கேட்டுக்கும், சாபக்கேட்டுக்கும் உள்ளாக்கியுள்ளது.

– இவ்வாறு தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழர் ஒற்றுமையைக் கேள்விக்கும், ஏனைய இனத்தோர் மத்தியில் கேலிக்கும் உள்ளாக்கியுள்ள இந்நிகழ்வு நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளது. அமைதிக்கு வழிகாட்ட வேண்டிய மதத் தலைவர்கள், வன்முறைக்குத் தலைமை தாங்குவதை கடுமையாகக் கண்டிக்கின்றேன்.

மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள மடுத் தேவாலயம் தமிழ்க் கத்தோலிக்கர்களால் பாதுகாக்கப்படும் கத்தோலிக்கத் தலம் என்பது போன்று, அதே மாவட்டத்தில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வர ஆலயம், தமிழ் இந்துக்களால் பாதுகாக்கப்படும் பாடல் பெற்ற இந்துத் தலம் என்பதும் அறியப்பட வேண்டும். இரு தரப்புகளும், இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். இதை மீறும் எந்தவொரு அடாவடி நடவடிக்கையையும் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

இது தொடர்பில், முதலில், இன்று (4ஆம் திகதி சிவராத்திரி உற்சவம் சிறப்பாக நடைபெறவேண்டும். அதற்குரிய பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்படவேண்டும். இரண்டாவது, உடைக்கப்பட்ட தற்காலிக வளைவு தூக்கி நிறுத்தப்பட வேண்டும். மூன்றாவது, மத வன்முறையில் ஈடுபட்டவர்கள் 5ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட வேண்டும் என மன்னார் பொலிஸ் தலைமையக அதிகாரி ரத்நாயக்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீநாத் பெரேரா, பிரதி பொலிஸ்மா அதிபர் அபே விக்கிரம ஆகியோருடன் பேசி பணிப்புரைகள் வழங்கியுள்ளேன்.

இந்த விவகாரத்தில் நேரடியாகத் தலையிடுமாறு மன்னார் மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரை தொலைபேசியில் அழைத்துக் கூறியுள்ளேன்.

சிவராத்திரியை அடுத்து, விரைவில் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு நேரடியாக வந்து சகல தரப்பினரிடமும் கலந்து பேசி பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை நான் பெற்றுத்தருவதாக திருக்கேதீஸ்வர ஆலய அறங்காவலர்களிடம் உறுதியளித்துள்ளேன் – என்றுள்ளது. (ஐ)

## விபத்துகள் அதிகரிப்பு; இருவர் பரிதாபச் சாவு!

நாட்டின் இருவேறு பகுதிகளில் இடம்பெற்ற விபத்துகளில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

அநுராதபுரம் – புத்தளம் வீதியின் நொச்சியாகம பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் பலத்த காயமடைந்த நபர் நொச்சியாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். நொச்சியாகம பகுதியை சேர்ந்த 48 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு – கண்டி பிரதான வீதியின் கரண்டுபன சந்தியில் வான் ஒன்றுடன் மோதி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். விபத்தில் பலத்த காயமடைந்த நபர் கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

## மின்தடை

யாழ்ப்பாணம், மார்ச் 05

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை –

**யாழ் பிரதேசத்தில் -**

பொற்பதி, நடுக்குடத்தனை ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

பட்டாணிச்சூர் கிராமத்திலும்

**மன்னார் பிரதேசத்தில் -**

நானாட்டான் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## இலங்கை மீதான பிரேரணை; ஆலோசனைக் கூட்டம் இன்று

இலங்கை குறித்து ஜெனீவாவில் இவ்வருடம் முன்வைக்கப்படவுள்ள பிரேரணை தொடர்பான முதலாவது ஆலோசனைக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டம் இன்று ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் குழு அறையில் இடம்பெறவுள்ளது.

இலங்கை தொடர்பான தற்போதைய நகல் பிரேரணையை தயாரித்துள்ள பிரிட்டன், கனடா மற்றும் ஜேர்மன் உள்ளிட்ட நாடுகளே இந்த ஆலோசனைக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன.

இதன்போது ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பிரேரணையின் நகல்வரைவு தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

விசேடமாக இந்தப் பிரேரணையில் புதிதாக விடயங்கள் சேர்க்கப்படவேண்டுமா அல்லது ஏற்கனவே பிரேரணையில் உள்ள விடயங்களைத் திருத்தத்துக்கு உட்படுத்த வேண்டுமா போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளன.

இதில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர். இதன்போது பிரேரணை தொடர்பான தமது யோசனைகளை உறுப்பு நாடுகள் முன்வைக்கவுள்ளன.

இந்த ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இலங்கை சார்பிலும் அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மதவாதத்தைத் தூண்டுகின்ற செயற்பாடுகளைத் தவிர்க்குக!

## சார்ள்ஸ் எம்.பி. வலியுறுத்து

மன்னார், மார்ச் 05

மதவாதத்தைத் தூண்டுகின்ற செயற்பாடுகளைத் தவிர்க்க வேண்டும். அனைவரும் பொறுமையாக – பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்.

மன்னார், திருக்கேதீஸ்வரம் சிவன் ஆலயத்துக்குச் செல்லும் வீதியில் அமைக்கப்பட்ட சிவராத்திரி வீதி வளைவு உடைத்து வீழ்த்தப்பட்டு அகற்றப்பட்டமை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு : –

இந்தச் சம்பவம் தொடர்பாக இன்று (நேற்று) திருகேதீஸ்வரர் கோயில் நிர்வாகத்தினருடனும் மாந்தை பங்குதந்தையிடமும் தனித்தனியாக சம்பவ இடத்துக்குச் சென்று உண்மை நிலவரங்களைக் கேட்டறிந்து கொண்டேன்.

இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் நிகழாதிருக்கவும் முரண்பட்ட இரு மதங்களுக்கிடையில் ஒரு சந்திப்பை மேற்கொண்டு இதை சுமுகமாகத் தீர்க்க அனைவரும் முன்வரவேண்டும் எனவும், இச்சம்பவங்களால் எமது இனத்தில் அரசியல் இலக்குகள் திசைமாறிச் செல்ல நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை எனவும் சம்பந்தபட்டவர்களிடம் தெரிவித்தேன்.

வன்முறைகளால் எந்தவிதமான ஒரு தீர்வையும் நாம் அடைந்துவிடமுடியாது. அனைவரும் பொறுமையாக – பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட முன்வரவேண்டும்.

இந்த அசம்பாவிதச் செயலைப் பயன்படுத்தி பல தீய சக்திகள் நாசகார வேலைகளில் ஈடுபடுவதற்கு முன்வருவார்கள். ஆகவே, எமது இனத்தின் முறுகலை சுமுகமாகப் பேசி அல்லது சட்டத்தை நாடி ஒரு முடிவுக்கு நாம் அனைவரும் வரவேண்டும்.

இது தொடர்பாக இந்து கலாசார அமைச்சர் மனோ கணேசன் என்னைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டறிந்துகொண்டார்.

தமிழ் மக்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தி இதில் குளிர்காய பல தீய சக்திகள் எமக்குள் ஊடுருவியுள்ளனர். ஆகவே, அனைவரும் பொறுப்புணர்ச்சியுடன் மதங்களை மதித்து இந்நேரத்தில் செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றேன் – என்றுள்ளது. (ஐ)

கிருபா லேணர்ஸ்
KIRUBAA LEARNERS
Govt. Approved A Grade DrivingTraing School

தலைமைக் காரியாலயம் - இல, 226 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
071 4546960
077 7225292






★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

சிறந்ததோர் சாரதி எப்போதும் வீதி ஒழுங்கு பற்றி விழிப்புடன் இருப்பார்.
வடமாகாணத்தின் முதற் தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கிளைக் காரியங்கள்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
மன்னார் 023 225 1656
வவுனியா 024 222 7777

கிளைக் காரியாலயங்கள்
யாழ்ப்பாணம் 227/6, கே.கே.எஸ். வீதி சுன்னாகம் (மதவடி அருகில்) 021 224 2022 071 4546956
முதலாம் கட்டைச் சந்தி பருத்தித்துறை 021 4923 201 071 4546961
இல - 36, கச்சேரி நல்லூர் வீதி (கச்சேரிக்கு அருகில்) யாழ்ப்பாணம் 021 222 6699 076 722 5292

# 3 கின்னஸ் சாதனைகளுடன் பூர்த்தியான கும்பமேளா நிகழ்வு



பிரயாக்ராஜ்,மார்ச்05

உத்தர பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடந்த கும்பமேளாவில் 3 கின்னஸ் சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் 3 நதிகள் சங்கமத்தில் உலக புகழ்பெற்ற கும்ப மேளா நிகழ்ச்சி மகரசங்கராந்தி தினமான ஜனவரி 15 ஆம் திகதி தொடங்கியது. மகாசிவராத்திரியான நேற்று 6ஆவது முக்கிய புனிதநீராடலுடன் இந்த நிகழ்ச்சி நிறைவுபெற்றது. இக்காலத்தில் இதுவரை 22 கோடி பக்தர்கள் நதிகள் சங்கமத்தில் புனிதநீராடியுள்ளனர்.

இதற்கிடையே கும்பமேளா நிகழ்ச்சியில் 3 கின்னஸ் சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அதிகமா்ன போக்குவரத்து மற்றும் கூட்டம் மேலாண்மை, மிகப்பெரிய ஓவியப்போட்டி, மிகப்பெரிய துப்புரவு மற்றும் கழிவு அகற்றும் திட்டம் ஆகிய மூன்றிலும் கின்னஸ் சாதனை படைக்கப்பட்டுள்ளன என மாநில கலாசார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்காக கின்னஸ் உலக சாதனை குழுவில் உள்ள 3 உறுப்பினர்கள் கடந்த 28 ஆம் திகதியில் இருந்து நேற்று வரை அங்கு ஆய்வில் ஈடுபட்டனர்.

28 ஆம் திகதி நெரிசலில் சிக்கிய 503 பஸ்கள் ஒரே நேரத்தில் புறப்பட்டு சென்றன. முதலாம் திகதி நடந்த இயற்கை காட்சி ஓவியப்போட்டியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

அதே சமயம் 10 ஆயிரம் துப்புரவு பணியாளர்கள் தூய்மைப்பணியில் ஈடுபட்டனர். இந்தச்மூன்றும் உலக சாதனைகளாகக் கருதப்படுகின்றன.

# ஒரே நள்ளிரவில் ஆயிரம் பறவைகள் பனி மழையில் உறைந்து உயிரிழப்பு!

## மத்திய பிரதேசத்தில் சனியன்று பரிதாபம்

மத்திய பிரதேசத்தில் உள்ள பெஞ்ச்புலிகள்காப்பகக்காட்டில் சனி இரவு இரவு 1,102 பறவைகள் பனியில் உறைந்து உயிரிழந்தன என வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து பெஞ்ச் புலிகள் காப்பக வனத்துறை இயக்குநர் விக்ரம்சிங்பரிஹார்தெரிவித்தவை வருமாறு:-

மத்தியப் பிரதேசத்தில் சின்ந்த்வாரா மாவட்டத்தில் பனிமழை பொழிந்தது.

குறிப்பாக கமார்பானி மற்றும் கன்ஹார் கிராமத்தில் பனிமழை கடுமையாக இருந்தது. இப்பகுதி சியோனி நகரிலிருந்து 60 கி.மீ. தொலைவில் உள்ளது.

சனிக்கிழமை இரவு பொழிந்த இப்பனிமழையில் சிக்கி 590 நாரைகள், 360 பச்சைக்கிளிகள், 152 காகங்கள் உயிரிழந்தன.


ஞாயிறு காலையில் அப்பகுதியில் சென்று பார்த்தபோது இவை அனைத்தும் பனியில் வெட வெடத்து இறந்துபோயிருந்தமையைக் காணமுடிந்தது.

வன உயிர்கள் பாதுகாப்புச் சட்டத்தின்படி அப்பறவைகளை சோதனையிட்டோம். பின்னரே அவை அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டன.

- இவ்வாறு வனத்துறை இயக்குநர் தெரிவித்தார்.

# இந்தியாவில் நிரம்பி வழிகின்றன மின்னணுக் கழிவுப் பொருள்கள்

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்



கொல்கத்தா,மார்ச் 05

இந்தியாவில் மின்னணு கழிவுப் பொருள்கள் அதிகரித்து வருகின்றன என அதிர்ச்சித் தகவல் ஆய்வில் வெளியாகி உள்ளது.

இந்தியா உள்ளிட்ட வளர்ந்து வரும் நாடுகளில் கம்ப்யூட்டர் உள்ளிட்ட மின்னணு பொருள்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. ஆண்டுதோறும் மின்னணுக் கழிவுகள் அதிகரித்து வருகின்றமையால் அவற்றை அகற்றுவது பெரும் சவாலாக உள்ளது. இந்த நிலையில் இந்தியாவில் மின்னணுக் கழிவுகள் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகின்றன என அசோசம் தொழில் வர்த்தக சபை நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

மின்னணுக் கழிவுகள் உருவாக்கத்தில் இந்தியா 5ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. சீனா முதல் இடத்தில் உள்ளது. அதற்கு அடுத்த 3 இடங்களில் அமெரிக்கா, ஜப்பான், ஜேர்மனி உள்ளன.

இந்தியாவில் கடந்த 2016இல் 20 லட்சம் தொன் மின்னணு கழிவுகள் இருந்தன. இது அடுத்த ஆண்டில் (2020) 52 லட்சம் தொன்னாக அதிகரிக்கும். மராட்டிய மாநிலத்தில் மின்னணு கழிவுகளின் பயன்பாடு 19.8 சதவீதமாக உள்ளது. அங்கு ஆண்டுக்கு 47 ஆயிரத்து 810 தொன் மின்னணுக்கழிவுப்பொருள்களே மறுசுழற்சி செய்யப்படுகின்றன.

இந்தகழிவுப்பொருள்களின்பயன்பாட்டில் தமிழகத்தின் பங்கு 13 சதவீதமாக உள்ளது. இதில் வருடந்தோறும் 52 ஆயிரத்து 427 தொன் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுகின்றன.




# சிறுநீரைச் சேகரித்துப் பயனடைய இந்திய அமைச்சரின் ஆலோசனை

நாக்பூர்,மார்ச் 05

தன்னுடைய பல ஆலோசனைகளை செயல்படுத்த யாரும் முன்வராவிட்டாலும் கூட, அசராமல் அடுத்த யோசனையை முன்வைத்திருக்கிறார் மத்திய அமைச்சர் நிதின் கட்கரி.

நாக்பூர் நகராட்சி சார்பில் இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கு விருது வழங்கும் விழா நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட கட்கரி, மனித சிறுநீரைச் சேமித்து உரமாக்கலாம் என்ற யோசனையை முன்வைத்தார்.

இது தொடர்பாகப் பேசிய அவர் –

"இது நடந்தால் இந்தியா உரத்தை இறக்குமதி செய்யவேண்டிய அவசியமே இருக்காது. இயற்கைக் கழிவுகளில் இருந்து எரிபொருள்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன. சிறுநீரில் நைட்ரஜனும் அம்மோனியம் சல்பேட்டும் உள்ளன. இவற்றின் மூலம் எரிபொருன்களைத் தயாரிக்க முடியும். விமான நிலையங்களில் சிறுநீரைச் சேமிக்கச் சொல்லி இருக்கிறேன். விவசாயத்துக்காக நாம் யூரியாவை இறக்குமதிசெய்கிறோம். ஆனால் ஒட்டுமொத்த நாடும் சிறுநீரைச் சேமிக்கும் பட்சத்தில், நாம் உரத்தை இறக்குமதி செய்யவேண்டிய தேவை இருக்காது" என்றார் கட்கரி.

சில ஆண்டுகளுக்கு முன்னதாக, தன்னுடைய சிறுநீரைச் சேமித்த கட்கரி, அதை டெல்லியில் உள்ள வீட்டுத் தோட்டத்துக்கு உரமாகப் பயன்படுத்துவதாகவும் அதன்மூலம், உற்பத்தி 25 வீதம் அதிகரித்ததாகவும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாக். ராணுவ ஆஸ்பத்திரில் இருந்து மசூத் அஸாரை இடம் மாற்றியது அரசு

காஷ்மீர் தீவிரவாத இயக்கத்தின் தலைவராக விளங்கும் மசூத் அஸார் மரணமடைந்து விட்டார் எனப் பரவிய வதந்தியைத் தொடர்ந்து தனது இராணுவ மருத்துவமனையில் இருந்து மசூத் அஸாரை பாகிஸ்தான் மாற்றியது.

காஷ்மீர் மாநிலம் புல்வாமாவில் கடந்த மாதம் 14ஆம் திகதி தற்கொலைப்படை தாக்குதலை நிகழ்த்தியது ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத அமைப்பு. 40 துணை இராணுவப்படை வீரர்கள் உயிரிழந்த இந்தக் கொடூரச் சம்பவத்திற்கு காரணமான தீவிரவாத இயக்கத்தின் தலைவராக விளங்குகின்றார் மசூத்அஸார். அவரைத்தொடர்ந்து பாதுகாப்பதிலேயே பாகிஸ்தான் கவனம் செலுத்தி வருகிறது.



சிறுநீரக கோளாறால் பாதிக்கப்பட்டுள்ள மசூத் அஸார், பாகிஸ்தானில் உள்ள இராணுவ மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்தார்.

அவர் உயிரிழந்து விட்டார் என உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகின.

இதுதொடர்பாக சமூக வலைதளங்களில் வெளியாகி வரும் தகவல்களின் அடிப்படையில், மசூத் அஸார் உண்மையிலேயே உயிரிழந்து விட்டாரா என்பதை உறுதி செய்யும் முயற்சியில் உளவுத்துறை அதிகாரிகள் தீவிரம் காட்டிவருகின்றனர்.

சர்வதேச பயங்கரவாதியாக மசூத் அஸாரை, ஐ.நா பாதுகாப்பு கவுன்ஸில் பட்டியலிட வேண்டும் என அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட நிரந்தர உறுப்பு நாடுகள் வலியுறுத்தியிருக்கின்றன. இதற்கு பாகிஸ்தான் எதிர்ப்புத் தெரிவிக்காது என தகவல் வெளியாகியிருக்கிறது.

உலக நாடுகளின் வலியுறுத்தல்படி மசூத் அஸார், சர்வதேச பயங்கரவாதியாக பட்டியலிடப்பட்டால், எந்த ஒரு நாட்டிற்கும் அவர் பயணமாகத் தடை விதிக்கப்படுவதோடு, அவரது சொத்துக்கள் முடக்கப்பட்டு, ஆயுதங்கள் கொள்வனவும் முற்றாக முடக்கப்படும்.

இதற்கிடையே, மசூத் அஸார் உயிரிழந்து விட்டார் என வெளியான தகவலில் உண்மையில்லை என்றும், அவர் ஆரோக்கியமாக இருக்கிறார் எனவும் ஜெய்ஷ்-இ-முகமது இயக்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

ராவல்பிண்டியில் உள்ள இராணுவ மருத்துவமனையில் வைத்து மசூத் அஸாருக்கு சிகிச்சை அளித்து வந்த பாகிஸ்தான் அரசு, உடனடியாக அவரது இருப்பிடத்திற்கே அனுப்பி வைத்து விட்டதாக உளவுத்துறை தகவல்கள் கூறுகின்றன. ஏற்கனவே, மசூத் அஸாரைப் பாதுகாத்து வந்த புகாரில் சிக்கிய பாகிஸ்தான் அரசுக்கு, அவருக்கு அளித்த சிகிச்சையின் மூலம் மேலும் நெருக்கடி உருவாகியிருக்கிறது.

இதனால், ராவல்பிண்டியில் உள்ள இராணுவ மருத்துவமனையில் இருந்து ஜெய்ஷ்-இ-முகமது இயக்கத்தின் தலைமை பீடம் அமைந்துள்ள பஹறவல்பூருக்கே அவரை அனுப்பி வைத்து விட்டது பாகிஸ்தான் அரசு. இதனால் திகைத்துப்போயுள்ள ஜெய்ஷ்-இ-முகமது இயக்கம், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இந்தியாவிடம் அடிபணிந்து விட்டார் எனக் கூறியிருக்கிறது.

## ஆப்கனில் 17 தீவிரவாதிகளை அரச படைகள் கொன்றனவாம்



காபூல், மார்ச் 05

ஆப்கானிஸ்தானில் அரசுப் படைகளின் தாக்குதலில் தலிபான் தீவிரவாதிகள் 17 பேர் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானின் ஹெல்மாண்ட் மாகாணத்தில் வாரர் மாவட்டத்தில் கடந்த முதலாம் திகதி இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இராணுவ வீரர்கள் 23 பேர் பலியாயினர். பாதுகாப்பு படையினரின் பதிலடியில் 16 தீவிவாதிகள் கொல்லப்பட்டனர் எனக் கூறப்பட்டது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர் களம் இறங்கினர். வடக்கு பரியாப் மாகாணத்தின் தவ்லத் அபாத் மாவட்டத்தில் தீவிரவாதிகளின் பதுங்குமிடங்களில் இராணுவ வீரர்கள் நடத்திய அதிரடி தாக்குதலில் தலிபான் அமைப்பின் மூத்த தலைவர்கள் 2 பேர் உள்பட 6 பேர் கொல்லப்பட்டனர்.

இதேபோல் தெற்கு கந்தஹார் மாகாணத்தில் ஷா வாலிகோட் மாவட்டத்தில் இராணுவத்தினர் நடத்திய தாக்குத்லில் 8 தீவிரவாதிகள் உயிரிழந்தனர். ஹார் மாவட்டத்தில் இராணுவ வீரர்களுக்கும், தீவிரவாதிகளுக்கும் நடந்த சண்டையில் 3 தீவிரவாதிகள் பலியாகினர், பாதுகாப்பு படை வீரர்கள் 2 பேர் காயம் அடைந்தனர் என்றும் கூறப்பட்டது.

VACANCY

We need Office staff for document prepaid and online Date entry with good knowledge in computer and English age below 32 years. Basic salary 19,500/= after 3 months 26, 500/=

SAAMSON
Experts in English Training
இன் 3 மாத சனி, ஞாயிறு
ஆங்கிலப் பயிற்சி நெறி
09.03.2019 சனி
1.காலை 08-10 2.மாலை 03-05
3 மாத பயிற்சிக் கட்டணம்
ரூபா 3000 மட்டுமே.
சான்றிதழ் அனுமதி புத்தகங்கள் இலவசம்
SAAMSON
ஒரு பிரிவில் 16 பேர் மட்டுமே!
இன்றே முன் பதிவு செய்யுங்கள்
403, வெலிங்டன் சந்தி.
பெருமாள் கோவிலடி.
யாழ். நகர்.
021 222 4282
077 621 4567

## அணு ஆயுதங்களைக் கைவிடாத வரையில் வட கொரியாவுக்கு எதிர்காலமே இல்லை!

### அமெ. ஜனாதிபதி டிரம்ப் திட்டவட்டம்



அணு ஆயுதங்களைக் கைவிடும் வரை வடகொரியாவுக்கு எதிர்காலம் கிடையாது என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் திட்டவட்டமாகக் கூறினார்.

அணு ஆயுதம் மற்றும் ஏவுகணை சோதனைகள் மூலம் உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக விளங்கி வந்த வடகொரியாவுடன் அமெரிக்கா, கடந்த ஆண்டு நேரடிப் பேச்சை ஆரம்பித்தது.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும், வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன்னும் சிங்கப்பூரில் சந்தித்து பேசினர். இந்த சந்திப்புக்கு பின்னர் அணுஆயுதம் மற்றும் ஏவுகணை சோதனை செய்வதை வடகொரியா நிறுத்தி வைத்தது.

எனினும் கொரிய தீபகற்பத்தை அணுஆயுதமற்ற பிரதேசமாக மாற்றும் வகையில் வடகொரியா அணு ஆயுதங்களை முழுமையாக கைவிட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்துகிறது.

அதேபோல், பொருளாதார நெருக்கடியில் தவிப்பதால் தங்கள் மீது விதித்துள்ள பொருளாதார தடைகளை அமெரிக்கா நீக்க வேண்டும் என வடகொரியா கோரிக்கை வைக்கிறது.

இது குறித்துப் பேசி முடிவு எடுப்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும், வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன்னும் கடந்த மாத இறுதியில் வியட்நாமில் இரண்டாவது முறையாகச் சந்தித்துப் பேசினர்.

ஆனால், இந்த 2 நாள் சந்திப்பு, எந்த உடன்பாடும் எட்டப்படாமல் முடிவுக்கு வந்தது. வடகொரியா தங்கள் மீதான பொருளாதாரத் தடை முழுவதையும் நீக்க வேண்டும் என கேட்டதை அமெரிக்கா ஏற்காததால் பேச்சு தோல்வியில் முடிந்ததாக அமெரிக்கா தரப்பில் கூறப்பட்டது.

ஆனால் இதனை மறுத்த வடகொரியா, தாங்கள் பாதியளவு பொருளாதார தடைகளையே நீக்க கோரினர் எனத் தெரிவித்தது. மேலும் இனி பேச்சுக்கு வாய்ப்பு இல்லை எனவும் கூறியது.

இந்த நிலையில், அணுஆயுதங்களை கைவிடாதவரை வடகொரியாவுக்கு எதிர்காலம் கிடையாது என டிரம்ப் திட்டவட்டமாக கூறினார். மேரிலாந்து மாகாணத்தில் நடைபெற்ற பழமைவாத அரசியல் நடவடிக்கை மாநாட்டின் நிறைவு விழாவில் பேசிய போது அவர் இதனை தெரிவித்தார்.

இது பற்றி அவர் கூறுகையில், அணுஆயுதங்களை முழுமையாக கைவிடுவது தொடர்பாக வடகொரியா ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டால், நம்பமுடியாத மற்றும் அற்புதமான பொருளாதார வளர்ச்சியை அந்நாடு அடையும். மாறாக அந்நாடு தொடர்ந்து அணுஆயுதங்களை வைத்திருக்குமேயானால், அந்நாட்டுக்கு பொருளாதார ரீதியில் எதிர்காலம் இருக்காது என கூறினார்.

இதற்கிடையே வடகொரியா உடனான உறவை பலப்படுத்தும் விதமாக தென்கொரியாவில் ஆண்டுதோறும் நடைபெறும் அமெரிக்க, தென்கொரிய படைகளின் கூட்டுப் பயிற்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதையொட்டி அமெரிக்க ராணுவ மந்திரி (பொறுப்பு) பேட்ரிக் சனாகன், தென்கொரிய ராணுவ மந்திரி ஜியோங்கியோங்டுவை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

அப்போது, ஆண்டு தோறும் மார்ச் முதல் வாரத்தில் தொடங்கி 10 நாட்கள் நடைபெறும் மிகப்பெரிய அளவிலான இருநாட்டு படைகளின் கூட்டுப்பயிற்சியை முடிவுக்கு கொண்டு வர இருதரப்பிலும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. எனினும் ராணுவத்தை தயார் நிலையில் வைத்திருப்பதற்கான வழக்கமான கூட்டுப்பயிற்சிகள் தொடர்ந்து நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிரியாவில் ஜிகாதி போராளிகள் தாக்குதல்; அரச படையினர் 33 பேர் சாவு; பலர் படுகாயம்

பெய்ரூட், மார்ச் 05

சிரியாவில் ஜிகாதி போராளி குழுக்கள் நடத்திய தாக்குதலில் அரசு ஆதரவு படையினர் 33 பேர் கொல்லப்பட்டனர்.

சிரியாவில் அரசு படைகளுக்கும் மற்றும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நீண்ட காலப் போர் நடந்து வருகிறது. அரசுக்கு எதிராக ஜிகாதி போராளி குழுக்களும் போரில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில், இத்லிப் நகர் அருகே அரசு ஆதரவு படையினர் மீது அன்சார் அல் தவ்ஹீத் ஜிகாதி போராளி குழுக்கள் திடீர் தாக்குதல் நடத்தி உள்ளன. இதில் அரச படையைச் சேர்ந்த 33 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.



இந்த குழு அல் தீன் என்ற குழுவுடன் கைகோர்த்துச் செயல்படுகிறது. இந்த இரு குழுக்களும் சிரியாவில் செயல்படும் அல் கொய்தா தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புடையவை.

அரசு படையினரின் துப்பாக்கிச் சூட்டில் 5 போராளிகள் கொல்லப்பட்டனர் என்று கூறப்பட்டது.


## விக்கி ஜெனீவா போவாரா...? போனால்...!

# கூட்டமைப்பு போன்று இரட்டை வேடம் தரித்து தமிழரை ஏமாற்றுவாரா...?

இறுதிப்போரில்நடந்தது இலங்கை அரசின்தமிழ் இனப்படுகொலை தான் என்ற வடமாகாண சபையின் தீர்மானத்தை விக்னேஸ்வரன் ஜெனீவா மனித உரிமைச் சபையிடம் கையளிப்பாரா?

அல்லது தமிழரசுக் கட்சி போன்று தமிழ் மக்களுக்கு ஒரு கதையும் ஜெனீவாவுக்கு வேறு கதையும் சொல்லப்படுமா?

ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனீவா மனித உரிமைச்சபை இலங்கை அரசுக்கு மீண்டும் கால அவகாசம் கொடுப்பதால், எதுவும் நடந்துவிடாது என தமிழ் அரசியல் பிரதிநிதிகள் அல்லாத தமிழ்த்தரப்பு கூறுகின்றது. ஈழத் தமிழர்கள் சார்பில் இலங்கை நாடாளுமன்றத்தில் அதிகளவு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியை மையப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதித் தலைவர் மாவை சேனாதிராசா, கால அவகாசம் வழங்கக்கூடாது என்கிறார். ஆனால் கால அவகாசம் வழங்குவதே நல்லது என கூட்டமைப்பின் பேச்சாளர் சட்டத்தரணி சுமந்திரன் கூறுகின்றார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் தான் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்படுவதாக அமைச்



சர் லக்ஸ்மன் கிரியெல்ல பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ரணில் அரசாங்கம் கால அவகாசத்தைக் கோருவது இலங்கையின் இறைமையைக் காட்டிக் கொடுக்கும் செயல் என மஹிந்த ராஜபக்ஷ தரப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

ஆனால் கடந்த காலங்களிலும் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலிலும் தங்கள் சட்டப் புலமையையும் ஆங்கில அறிவையும் அடைவு வைத்துத் தங்கள் மூளையை விற்பனை செய்த, செய்து வருகின்ற தமிழ் அரசியல் பிரதிநிதிகளையே தமிழ் மக்கள் வரலாற்று ரீதியாகக் கண்டு வருகின்றனர்.

இந்தநிலையில் இந்த மாதம் ஜெனீவா மனித உரிமைச் சபை கூடவுள்ளது.

பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, மசிடோனியா, மொன்ரனிக்கோ ஆகிய நாடுகள் இணைந்து எதிர்வரும் 20ஆம் திகதி ஜெனீவா மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பான புதிய தீர்மானம் ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளன.

இந்தத் தீர்மானம் தொடர்பான அதிகாரபூர்வமற்ற கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கலந்துரையாடலின் பின்னர் மேற்படி நாடுகளின் பிரதிநிதிகள் அதிகாரபூர்வமாக இலங்கையு

> “ ரணில் விக்கிரமசிங்கவின் ஏமாற்று நடவடிக்கைகளை ஜெனீவா புரிந்துகொண்டுள்ளது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரட்டை வேடத்தை ஜெனீவா அறியவில்லை. இதுதான் மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப் பட்டமைக்கான காரணம். இந்த நிலையிலேதான் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஜெனீவாவுக்குப் பயணம் செய்யவுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

டன் தொடர்பு கொண்டு பேசவுள்ளனர் என ஜெனீவாத் தகவல்கள் கூறுகின்றன.

பொறுப்புக் கூறல் தொடர்பான இந்த நாடுகளின் தீர்மானத்தை ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ஏற்றுக்கொள்ளவுள்ளதாக மஹிந்த ராஜபக்ஷ தரப்பு உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன கூறியுள்ளார்.

2015 ஆம் ஆண்டு மைத்திரி – ரணில் அரசாங்கம் நல்லாட்சி எனக்கூறிக்கொண்டு பதவியேற்ற நிலையில் இலங்கை தொடர்பான அமெரிக்காவின் தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியிருந்தது என்றும் குற்றம் சுமத்தியுள்ள தினேஸ் குணவர்த்தன, அதன் தொடர்ச்சிதான் இந்த ஆண்டு அமர்விலும் இடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

என விக்கிரமபாகு கருணாரத்ன தலைமையிலான இடதுசாரி முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

## அல்லது

ரணில் விக்கிரமசிங்கவின் ஏமாற்று நடவடிக்கைகளை ஜெனீவா புரிந்துகொண்டுள்ளது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்ட



தமிழ் மக்கள் பேரவை வரைவு ஒன்றை தயாரித்து ரணில் அரசாங்கத்திடம் கையளித்திருந்தது.

ஆனால், தமிழ் மக்கள் பேரவையில் இருந்து வெளியேறி சில மாதங்களுக்கு தமிழ் மக்கள் கூட்டணி என்ற புதிய கட்சி ஒன்றை விக்னேஸ்வரன் உருவாக்கிய போது, தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட அந்த வரைவு பற்றி எதுவுமே அவர் பேசவில்லை.

ஆகவே காலத்துக்கு காலம் இலங்கை அரசாங்கம், சர்வதேச நாடுகள் ஆகியவற்றின் போக்குகளுக்கு ஏற்ப வளைந்து கொடுக்கின்ற அரசியல் செயற்பாடுகளில் தான் விக்னேஸ்வரனும் ஈடுபடுவாரா அல்லது தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற உறுதியான மாற்றுத் தலைமைக்குரிய பண்புகளுடன் இயங்குவாரா என்பதும் இங்கு கேள்விக்குரியவையே.

பூகோள அரசியல் நிலைமைக்கு ஏற்ப தமிழ்த்தரப்பின் நியாயப்பாடுகளை புரியவைத்து இனப்படுகொலைதான் நடந்தது என்பதை சர்வதேச சட்டங்கள் ஊடாக நியாயப்படுத்தும் தளமாக ஜெனீவா மனித உரிமைச்சபையை விக்னேஸ்வரன் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

இனப் படுகொலைதான் நடந்தது என்ற வடமாகாண சபையின் தீர்மானத்துக்கும் சட்ட அந்தஸ்து உள்ளது. ஏனெ

## இனப் படுகொலைதான் நடந்தது என அடித்துக் கூறி, சர்வதேச விசாரணை அவசியம் என வலியுறுத்துவாரா...?

மஹிந்த ராஜபக்ஷவை மையப்படுத்தியுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் அதனுடைய ஆதரவுக் கட்சிகள் கால அவகாசம் வழங்குவதை ஏற்றுக் கொள்ளமாட்டா என்றும் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை அரசையும் இலங்கைப்படைகளையும் காட்டிக்கொடுக்க அனுமதிக்க முடியாதென மஹிந்த தரப்பு உறுப்பினர் விமல் வீரவன்ஸவும் கூறியுள்ளார்.

ஆனால், கால அவகாசம் வழங்கப்படுவதன் மூலம் இலங்கையில் மேலும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பலாம் என அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

காலத்துக்கு காலம் இலங்கை அரசு, சர்வதேச நாடுகள் ஆகியவற்றின் போக்குகளுக்கு ஏற்ப வளைந்து கொடுக்கின்ற அரசியல் செயற்பாடுகளில்தான் விக்னேஸ்வரனும் ஈடுபடுவாரா அல்லது உறுதியான மாற்றுத் தலைமைக்குரிய பண்புகளுடன் இயங்குவாரா என்பதும் இங்கு கேள்வியாக எழுகிறது.

அதேவேளை, ஜெனீவா மனித உரிமைச் சபையின் விதப்புரைகளின் பிரகாரம் போர்க்குற்ற விசாரணைகளை ஆரம்பித்தல், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் நேர்மையுடன் பொறுப்புக்கூறல் என்ற அடிப்படையில் தான் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்படவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபைத் தகவல்கள் கூறுகின்றன.

ஆனால் வெறுமனே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல் என்ற கோசத்துடன் மாத்திரம் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான கால அவகாசத்தை ரணில் அரசாங்கம் பயன்படுத்தி ஈழத் தமிழரின் அரசியல் பிரச்சினையின் உண்மையான தோற்றத்தை திசை திருப்பி விடும்

மைப்பின் இரட்டை வேடத்தை ஜெனீவா அறியவில்லை. இதுதான் மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப் பட்டமைக்கான காரணம்.

இந்த நிலையிலேதான் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஜெனீவாவுக்குப் பயணம் செய்யவுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

முள்ளிவாய்க்கால் இறுதிப்போரில் நடந்தவை இன அழிப்பு என்று வடமாகாண சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியவர் விக்னேஸ்வரன். ஆனால் ஜெனீவாவுக்குச் சென்று விளக்கமளிக்கும்போது வடமாகாண சபையின் தீர்மானத்தை மனித உரிமைச் சபையின் உயர் அதிகாரிகளிடம் கையளிப்பாரா? அல்லது தமிழ் இனப்படுகொலைதான் நடந்தது என்று அடித்துக் கூறுவாரா?

ஆகவே போர்க்குற்ற விசாரணை என்பதை விட இனப்படுகொலை பற்றிய விசாரணைகள் வேண்டும் என்றும் அதற்கு நேரடியான சர்வதேச விசாரணை அவசியம் எனவும் விக்னேஸ்வரன் ஜெனீவாவில் கோருவாரா?

அல்லது நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் வாக்குகளைப் பெறும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் 'போன்று தமிழ் மக்களுக்கு ஒரு கதையும் ஜெனீவா மனித உரிமைச் சபை அதிகாரிகளுக்கு வேறு ஒரு கதையும் கூறி இரட்டை வேடம் போடுவாரா என்று விக்னேஸ்வரன் தொடர்பான கேள்விகளும் தற்போது எழுகின்றன.

அதுவும் விக்னேஸ்வரன் ஜெனீவாவுக்குச் செல்லவுள்ளார் என்று செய்திகள் வெளியான பின்னரே இவ்வாறான கேள்விகள் எழ ஆரம்பித்துள்ளன.

வடக்கு, கிழக்கு இணைந்த சுயாட்சி அதிகாரமே ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என விக்னேஸ்வரன் உருவாக்கிய

னில் அது மக்களால் ஜனநாயக ரீதியான தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்ட சபை. ஆகவே அந்த சபையின் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் நிராகரிக்கவும் முடியாது.

அப்படி நிராகரித்தால். 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமான மாகாண சபைகளின் அதிகாரமற்ற தன்மையைக் கூட விவரிக்கலாம்.

குறிப்பாக ஜெனீவா உப குழுக் கூட்டங்களில் விக்னேஸ்வரன் இந்த நியாயங்களை முன்னாள் முதலமைச்சர் என்ற முறையில் எடுத்துக் கூற முடியும். அதற்கான ஆற்றல், சட்ட அறிவு சர்வதேசத் தொடர்பாடல் அவரிடம் உண்டு.

ஆனால், கடந்த காலங்களிலும் 2009 ஆம் ஆண்டு மே மாத்திற்குப் பின்னரான சூழலிலும் தங்கள் சட்டப் புலமையையும் ஆங்கில அறிவையும் அடைவு வைத்துத் தங்கள் மூளையை விற்பனை செய்த, செய்து வருகின்ற தமிழ் அரசியல் பிரதிநிதிகளையே தமிழ் மக்கள் வரலாற்று ரீதியாகக் கண்டு வருகின்றனர்.

எனவே விக்னேஸ்வரன், அந்த மூளையை விற்பனை செய்கின்ற வரலாற்றுத் தவறுகளையும் வரலாற்றுத் துரோகங்களையும் மாற்றுவாரா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இந்த இடத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எவ்வாறு செயற்படுகின்றது, அல்லது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை இந்தச் செய்திக் கட்டுரை அவர்களுக்குப் புரிய வைத்திருக்கும்.

நிரந்தர அரசியல் தீர்வு ஒன்று கிட்டும் வரை, சாதாரண கட்சி அரசியல் செயற்பாடுகளுக்கு அப்பால் தேசிய இயக்கம் ஒன்றைக் கட்டியெழுப்ப வேண்டிய அவசியத்தை தமிழ்ப் பிரதிநிதிகள் நம்புவதாக இல்லையே. *

நன்றி - 'கூர்மை' இணையம்

# குற்றம்சாட்டப்பட்ட அதிகாரிகளை பணி இடைநிறுத்துவது அவசியம்!

## சாலிய பீரிஸ் வலியுறுத்தல்



கொழும்பு, மார்ச் 05

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில், தமது செயலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையின்பரிந்துரைகளை,இலங்கைஅரசுநடைமுறைப்படுத்த வேண்டும் என்று காணாமல் போனோருக்கான பணியகத்தின் தலைவர் கலாநிதி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடத்தல்கள், மற்றும் தொடர்புடைய குற்றங்களுடன் தொடர்புபட்ட குற்றவியல் நடவடிக்கைகளில் சந்தேக நபர்களாக பெயரிடப்பட்ட அரச அதிகாரிகளைப் பணியில் இருந்து இடைநிறுத்தவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் இடைக்கால நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக, பணியகத்தின் இடைக்கால அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

இந்த இடைக்கால நிவாரணத்தை வழங்கும் பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்.

அத்துடன், நீதியுடன் தொடர்புடைய பரிந்துரைகளையும் குறிப்பாக, கடத்தல்கள், மற்றும் தொடர்புடைய குற்றங்களுடன் தொடர்புபட்ட குற்றவியல் நடவடிக்கைகளில் சந்தேகநபர்களாக பெயரிடப்பட்ட அரச அதிகாரிகளை பணியில் இருந்து இடைநிறுத்துவது தொடர்பான பரிந்துரைகளையும், இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஒரு நாடு என்ற வகையில், உண்மை, நீதியை வழங்குதல், காணாமற் போனோரின் குடும்பங்களின் உரிமைகளை பெற்றுக் கொடுத்தல் எமது கடமையாகும்-என்றார்.

காணாமற்போனோருக்கான பணியகம் உருவாக்கப்பட்ட ஆறு மாதங்களில், கடந்த 2018 செப்ரெம்பர் மாதம், இடைக்கால அறிக்கையை ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளித்திருந்த போதும், அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மஹிந்த அணியிலிருந்து வெளியேறத் தயங்கோம்

## எச்சரிக்கின்றார் வீரவன்ஸ



கொழும்பு, மார்ச் 05

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் ஐ.தே.க.-ஜே.வி.பி. திட்டத்துக்கு ஆதரவு அளிப்பதில் இருந்து விலகிக் கொள்ளாவிட்டால், மஹிந்த ராஜபக்ஷ அணியில் இருந்து வெளியேறப் போவதாக விமல் வீரவன்ஸ எச்சரித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியிலும், மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலும் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி பங்காளிக் கட்சியாக இருந்து வருகிறது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ, கூட்டு எதிரணியின் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திவரும் விமல் வீரவன்ஸ, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படுவதற்கும் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகிறார்.

இந்தநிலையில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சிகள் இடம்பெற்று வந்தன.

இந்தநிலையிலேயே கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவதை தடுப்பதற்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு இணக்கப்பாடு காணப்பட்டால் மஹிந்த அணியில் இருந்து விலகவும் தயங்கமாட்டோம் என்று விமல் வீரவன்ஸ எச்சரித்துள்ளார். (ஐ)

# காணாமற்போனோர் செயலக முதலாவது கிளை மாத்தறையில்

## திறந்து வைத்தார் சபாநாயகர்




கொழும்பு, மார்ச் 05

காணாமற்போனோருக்கான பணியகத்தின் முதலாவது பிராந்திய கிளைச் செயலகம், மாத்தறையில் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அரசு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அளித்த வாக்குறுதிக்கு அமைய, நிலைமாறு கால நீதிப்பொறிமுறைகளை உருவாக்கும் செயல்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு, காணாமற்போனோருக்கான செயலகத்தை உருவாக்கியது.

இந்தச் செயலகம், வடக்கு-கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும், தென்பகுதியிலுமாக, மொத்தம் 12 கிளைச் செயலகங்களை அமைக்கவுள்ளதாக அதன் தலைவர் சாலிய பீரிஸ் கூறியிருந்தார்.

இந்த நிலையில் முதலாவது கிளைச் செயலகம் கடந்த சனிக்கிழமை மாத்தறையில் திறந்து வைக்கப்பட்டது. இதனைச் சபாநாயகர் கரு ஜெயசூரிய திறந்து வைத்தார்.

அதேவேளை, இன்னொரு கிளைச் செயலகம் மன்னாரில் இந்த மாதம் திறந்து வைக்கப்படவுள்ளது.

காணாமற்போனோருக்கான செயலகம் உருவாக்கப்பட்டு ஓர் ஆண்டு கடந்தும், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காணவில்லை என்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும நிலையில் இந்த கிளைச் செயலகங்கள் அமைக்கப்படும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# சிறப்பு அதிரடிப் படைக்கு அதிநவீன ரக ஆயுதங்கள்!

## கொள்வனவுக்கு அரசு நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 05

சிறப்பு அதிரடிப்படைக்கு, அதி நவீன ஆயுதங்கள் புதிதாக கொள்வனவு செய்து வழங்கப்படவுள்ளன எனச் சிறப்பு அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.ஆர். லத்தீப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாதாள உலகக் குழுக்களின் தலை வர்கள் மற்றும் போதைப் பொருள் குற்றவாளிகளுக்கு எதி ரான நடவடிக்கைகளில், ஈடுபடும் போது, சிறப்பு அதிரடிப்படையினர் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில், சிறப்பு ஆயுதங்கள் வழங்கப்படவுள்ளன.

சிறப்பு அதிரடிப்படையினருக்குத் தேவையான பெருமளவு ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் பாதுகாப்பு அமைச்சு ஈடுபட்டுள்ளது.

வெளிநாட்டில் இருந்து இந்த ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இதுபற்றிச் சில நாடுகளுடன் பேசியுள்ளோம். எனினும், கலந்துரையாடிய நாடுகளில் சீனா உள்ளடங்கவில்லை-என்றார்.

அதேவேளை, சிறப்பு அதிரடிப்படையினரின் தேவைக்காக 1000 துப்பாக் கிகள், அமெரிக்காவிடம் இருந்து வாங்கப்படவுள்ளதாக மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு கொள்வனவு செய்யப்படவுள்ள ஆயுதங்களில் எம்- 16 துப்பாக்கிகள்-500, எம்.பி-5 உபஇயந்திரத் துப்பாக்கிகள்- 250, கைத்துப்பாக்கிகள்-250 என்பன அடங்கியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)



# கற்றாழைச் செடிகள் கடத்தியவர்கள் கைது



யாழ்ப்பாணம், மார்ச் 05

தீவகப் பகுதியில் கற்றாழைச் செடிகளைச் சட்டவிரோதமாகக் கடத்திய தென்னிலங்கை வியாபாரிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தென்னிலங்கை வியாபாரிகள் மண்டைதீவுச் சந்தியில் வைத்து நேற்று முன்தினம் மதியம் கைதுசெய்யப்பட்டனர் என ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

புங்குடுதீவுப் பகுதியில் உள்ள கற்றாழைத் தோட்டங்களுக்குள் புகுந்த தென்னிலங்கை வியாபாரிகள் அங்கிருந்த பயிர்களை களவாகப் பிடுங்கி வாகனத்தில் ஏற்றி வந்துள்ளனர்.

இதனை அவதானித்த அப்பகுதி இளைஞர்கள் வாகனத்தை மறிக்க முற்பட்டபோது சந்தேகநபர்கள் தப்பித்துள்ளனர். இதனால் உடனடியாகப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு மண்டைதீவுச் சந்தியில் வைத்து இருவரும் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் விவேகாந்த் தலைமையிலான பொலிஸாரே இந்தக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஐ)

# 39 வயதில் சிக்சர்கள்!




இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் 39 சிக்சர்கள் அடித்தமை குறித்து, மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் கிறிஸ் கெய்ல் நெகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள்–இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடர் நடந்து வந்தது. இதில் இங்கிலாந்து அணி முதல் மற்றும் 4ஆவது போட்டியிலும், மேற்கிந்திய தீவுகள் அணி 2ஆவது மற்றும் 5ஆவது போட்டியிலும் வெற்றி பெற்றன.

மூன்றாவது போட்டி மழையால் ரத்தானதால் இந்தத் தொடர் சமனில் முடிந்தது. மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் இந்த தொடரில் இரண்டு சதம், இரண்டு அரைசதம் விளாசினார். மொத்தம் 39 சிக்சர்கள் அடித்தார். இரு நாடுகள் இடையிலான ஒருநாள் தொடரில் வீரர் ஒருவர் அடித்த அதிகபட்ச சிக்சர்கள் இதுதான்.

உலகக் கிண்ணத் தொடருடன் ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்த கிறிஸ் கெய்ல், இந்த சாதனை குறித்து கூறுகையில்,

'மேற்கிந்தியத் தீவு மண்ணில் இதுவே எனது கடைசி ஒருநாள் தொடர். அதனால் ரசிகர்களுக்கு விருந்து படைக்க நினைத்தேன். தொடர் முழுவதும் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தின. ஜமைக்கா ரசிகர்கள் முன்னிலையில் விளையாடுவது சிறப்பான அனுபவத்தை அளிக்கக் கூடியது. ரசிகர்கள் எப்பொழுதும் நமக்கு ஊக்கமளித்துக் கொண்டே இருப்பார்கள். மேற்கிந்தியத் தீவு ஜெர்சியை அணிந்துகொண்டு, சொந்த மண்ணில் ரசிகர்கள் முன்னிலையில் விளையாடுவது மிகச் சிறப்பான அனுபவத்தைக் கொடுக்கக் கூடியது.

நான் சமீபத்தில் பங்கேற்ற ரி 20 தொடர்களில் பெரிய அளவில் ஓட்டங்கள் குவிக்கவில்லை. ஆனால், இந்தத் தொடரில் பார்முக்கு திரும்பியது மகிழ்ச்சி அளிக்கிறது. சொந்த மண்ணில் இதுதான் எனது சிறப்பான ஆட்டம் என நினைக்கிறேன். நான் சிறப்பாக விளையாடுவது குறித்தோ, சிக்சர்கள் விளாசுவது குறித்தோ ஆச்சரியப்படவில்லை. உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், அது இயல்பாகவே வருவது. டி20 தொடர்களில் நான் நிறைய சிக்சர்கள் விளாசியிருக்கிறேன். ஆனால், ஒருநாள் தொடரில் இதுதான் முதல்முறை என நினைக்கிறேன். 39 வயதில் 39 சிக்சர்கள் அடித்தமையை பெருமையாகக் கருதுகிறேன்–என்றார். (ஐ)



# இங்கிலாந்தை போட்டுத் தாக்கிய மேற்கிந்தியத் தீவு

இங்கிலாந்து அணிக்கு எதிரான ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியத்தீவு அணி 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்று தொடரை 2-2 எனச் சமநிலைப்படுத்தியுள்ளது.

செயிண்ட் லூசியா மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவு அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

அதன் பிரகாரம் முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணி 28.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 113 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

அந்த அணி சார்பாக அலெக்ஸ் ஹேல்ஸ் மற்றும் ஜோஸ் பட்லர் தலா 23 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் ஒஷேன் தோமஸ் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனை அடுத்து 114 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவு அணி 12.1 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

அவ்வணி சார்பாக கிறிஸ் கெய்ல் 77 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் மார்க் வூட் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஏற்கனவே நடைபெற்று முடிந்துள்ள நான்கு ஒருநாள் போட்டிகளில், மூன்று இரண்டு போட்டிகளில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

ஒரு போட்டியில் மேற்கிந்தியத் தீவு அணி வெற்றிபெற, மற்றொரு போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது. எனவே இந்த போட்டியை எளிதில் வென்ற மேற்கிந்தியத் தீவு அணி தொடரை சமப்படுத்தியுள்ளது. இந்தப் போட்டியில் ஆட்ட நாயகனாக ஒஷேன் தோமஸும், தொடரின் நாயகனாக கிறிஸ் கெய்லும் தெரிவு செய்யப்பட்டனர்.

# இலங்கையைப் பழி தீர்த்த தென்னாபிரிக்க அணி

## 8 விக்கெட்டுக்களால் இலகு வெற்றி

இலங்கை அணிக்கு எதிரான முதல் ஒருநாள் சர்வதேசப் போட்டியில் தென்னாபிரிக்க அணி 08 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடக் களம் இறங்கிய இலங்கை அணி 47 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 231 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

இலங்கை அணி சார்பில் குசல் மெண்டிஸ் அதிகபட்சமாக 60 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் தாஹிர் மற்றும் நிகிடி ஆகியோர் தலா 03 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு 232 என்ற வெற்றியிலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களம் இறங்கிய தென்னாபிரிக்க அணி 38.5 ஓவர்கள் நிறைவில் 02 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து 232 ஓட்டங்களை பெற்று 8 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பில் அணித் தலைவர் டுபிளஸிஸ் 112 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்திருந்தார்.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1:0 என்ற அடிப்படையில் தென்னாபிரிக்க அணி முன்னிலை பெற்றுள்ளது. (ஐ)



# வென்றது பார்சிலோனா

ஸ்பானியக் உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லாலிகா தொடரில், தமது மைதானத்தில் இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற எல்கிளாசிலோவில், தமது பரமவைரிகளான பார்சிலோனாவிடம் றியல் மட்ரிட் தோல்வியுற்றது.



இப்போட்டியின் 26 ஆவது நிமிடத்தில், சக பின்கள வீரரான சேர்ஜி றொபேர்ட்டோ, றியல் மட் ரிட்டின் பின்கள வீரர்களுக்குள்ளால் கொடுத்த பந்தை நடப்புச் சம்பியன்களான பார்சிலோனாவின் மத்தியகள வீரரான இவான் றகிட்டிச் கோலாக்கியதன் மூலமே இப்போட்டியில் 1-0 என்ற கோல்கணக்கில் பார்சிலோனா வென்றது.



## திருக்கேதீஸ்வரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குத் தற்காலிகமாக அமைக்குமாறு நீதிவான் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து மாந்தை லூர்து அன்னை ஆலயத்துக்கு முன்பாக முன்னர் அலங்கார வளைவு இருந்த இடத்தில் புதிய வளைவு நேற்று நண்பகலில் அமைக்கப்பட்டது.

இந்த வளைவு அமைக்கும் பணி மன்னார் பொலிஸார் முன்னிலையில் நடந்தது. நேற்றுப் பிற்பகலில் வளைவு அமைக்கும் பணிகள் நிறைவடைந்தன எனத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் திருக்கேதீஸ்வரம் சிவன் ஆலயத்துக்குச் செல்லும் வீதியில் அமைக்கப்பட்ட சிவராத்திரி வீதி வளைவு உள்ளூர்க் கத்தோலிக்க மக்கள் சிலரால் நேற்று முன் தினம் மாலை உடைத்து அகற்றப்பட்டது.

இந்த நிலையில் அந்த வளைவை நான்கு நாள்களுக்குள் மீள அதே இடத்தில் அமைக்குமாறு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து அமைச்சர் மனோ கணேசன் தெரிவிக்கையில் –

இன்றைய தினம் (நேற்று) விடுமுறை என்று நாளை வரை காத்திருக்காமல், சிவராத்திரி உற்சவம் நடைபெறவேண்டிய அவசரம் கருதி, இந்த வழக்கை நீதிவானின் உத்தியோகபூர்வ இலலத்துக்கு கொண்டு செல்லும்படி, மன்னார் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அபேவிக்கிரமவுக்கு இன்று (நேற்று) காலை அறிவுறுத்தியிருந்தேன். அதன்படி வழக்கு பதில் நீதிவானிடம் கொண்டு செல்லப்பட்டது. சட்டத்தரணி விநோதன் திருக்கேதீஸ்வரம் ஆலயம் சார்பாக முன்னிலையானார்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான், வளைவை உடனடியாக நான்கு நாள்களுக்கு அதே இடத்தில் மீள அமைக்குமாறு உத்தரவிட்டார் என்று மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வழக்கு விசாரணையை எதிர்வரும் 8ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

இதனையடுத்து வீதிவளைவை அமைக்கும் பணிகள் நேற்று முழு வீச்சில் இடம்பெற்றன. நேற்றுப் பிற்பகலில் இந்த வளைவு முழுமையாக அமைத்து முடிக்கப்பட்டது. (ஐ)

## படையினருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இராணுவத்தினரைக் குற்றவாளியாகக் கருதும் மேற்குலக நாடுகளின் அபிப்பிராயங்களுக்கு ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் இணக்கம் தெரிவித்து அவர்களுக்கு முக்கியத்துவம் வழங்குவது ஒருதலைபட்சமான செயற்பாடு.

பயங்கரவாத சிவில் யுத்தத்தை மேற்கொண்ட விடுதலைப் புலிகள் அமைப்பினர் போர்க் குற்றங்களைப் புரியவில்லையா?– என்றார். (ஐ)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மங்கள சமரவீரவால் முன் வைக்கப்படும் பட்ஜெட்டில், வழமைபோல் இம்முறையும் பாதுகாப்பு அமைச்சுக்கே கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இன்று நிதி அமைச்சரின் 'பட்ஜெட்' உரைமாத்திரமே இடம்பெறும்.

6 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதிவரை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெறும். 12 ஆம் திகதி மாலை 5 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறும்.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்துக்கு 19 நாள்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதன்படி 13 ஆம் திகதி முதல் ஏப்ரல் 4ஆம் திகதிவரை குழு நிலை விவாதம் நடைபெற்று, 5 ஆம் திகதி பட்ஜெட்மீது இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும். (ஐ)

## காணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெட்டியாராச்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்துக்கு நேற்று முற்பகல் விஜயம் மேற்கொண்ட ஆளுநர் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஆளுநரைக் கட்டளைத் தளபதி வரவேற்று, யாழ். மாவட்டத்தின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் நல்லிணக்க ரீதியில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படும் மனிதாபிமான செயற்பாடுகள் தொடர்பாகவும் விளக்கமளித்தார்.

மேலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நல்லிணக்க செயற்பாடுகளுக்கமைவாக பொதுமக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டுவருகின்றமையையும், குறிப்பாக யாழ். மாவட்டத்தில் படையினரால் பெருமளவிலான காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளமையையும் பாராட்டிய ஆளுநர், மேலதிகமாக தற்போது பாதுகாப்புப் படையினரிடம் இருக்கும் தனியார் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, பாதுகாப்பு கேந்திர ஸ்தானத்தில் அந்தக் காணிகள் இருக்கும்பட்சத்தில் காணி உரிமையாளர்களுடன் கலந்துரையாடி அவற்றுக்கு மாற்றீடான நடவடிக்கைகளை மேற்கொண்டு யாழ். மாவட்டத்தில் காணப்படும் காணிப் பிரச்சினைகளை விரைவில் முடிவுக்கு கொண்டுவருமாறும் கோரிக்கை விடுத்தார். (ஐ)

## வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிக்கப்பட்டன.

படையினர் வசமிருந்த காணிகளை விடுவிக்கும் நிகழ்வு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றபோது யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி தர்ஷன ஹெட்டியாராச்சி விடுவிக்கப்பட்ட காணிகளுக்கான பத்திரத்தை யாழ். மாவட்ட செயலர் என். வேதநாயகத்திடம் கையளித்தார்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே 251, 253, 246 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள காணிகளே இதன்போது விடுவிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அரச அதிகாரிகள், காணி உரிமையாளர்கள், இராணுவத்தினர், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

நீண்ட காலமாகப் படையினர் ஆக்கிரமிப்பில் இருந்த இந்தக் காணிகளை விடுவிக்குமாறு மக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வந்தனர். இதற்கமைய படிப்படியாகக் காணிகளும் விடுவிக்கப்பட்டு வந்தன. இந்த நிலையிலையே நேற்று மேலும் ஒரு தொகுதி காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்தக் காணிகள் விடுவிக்கப்படும் நிலையில் அவற்றின் உரிமையாளர்கள் தமது காணிகளைப் பொறுப்பெடுத்து பாதுகாத்துக் கொள்ளுமாறுமாறும் அரச அதிபர் கேட்டுக் கொண்டார். (ஐ-07)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவினர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுவதாக ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தலைவரும் முன்னாள் மாகாண அமைச்சருமான திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

சுழிபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடகவியியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

இறுத்திக் கட்ட யுத்தம் இடம் பெற்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்தபோது அவர்களின் காணி உறுதிப்பத்திரங்கள் பலவும் தொலைந்துவிட்டன. அவர்களில் அதிகமானவர்களது காணிகள் பேர்மிற் காணிகளாவே இருந்துள்ளன.

இந் நிலையில் அவர்கள் மீளக்குடியமர்ந்தபோது அந்தக் காணிகளுக்கான உரிமைப் பத்திரங்கள் அல்லது பேர்மிற் என்பன யுத்தத்தில் தொலைந்தமையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக அவர்கள் தமது காணிகளை அடையாளப்படுத்திப் பெற்றுக் கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

அந்த மக்களுக்கு வீட்டுத் திட்டவசதி உள்ளிட்ட சிலவற்றை அரசு ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அதற்கான பத்திரங்கள் இல்லாததால் அந்த உதவிகள் கிடைக்காத நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. ஆகையினாலே அந்த மக்கள் தமது காணி உறுதிப் பத்திரங்கள் மற்றும் தாம் வாழ்ந்த காணிகளுக்கான பேர்மிற் பத்திரங்களை மீளத் தருமாறு கேட்கின்றனர்.

ஆனால் அந்த மக்களுடைய காணிகளுக்கான பேர்மிற் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. ஏனெனில் அந்தக் காணிகளின் பேர்மிற் யாருடைய பெயரில் இருந்ததோ அவரே வரவேண்டுமென்று கேட்கப்படுகிறது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் பலர் காணாமலாக்கப்பட்டிருக்கின்றனர்.

அவ்வாறு காணாமலாக்கப்பட்டவர்களை மீட்டுத் தர வேண்டுமென வலியுறுத்தி அவர்களது உறவினர்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்த நிலையில் காணாமற்போனவர் உயிரிழந்தார் என மரணச் சான்றிதழைப் பெற்றுக் கொண்டு அதனைக் கொண்டுவந்தால் காணிகளின் பத்திரங்கள் தரப்படுமென அதிகாரிகளால் கூறப்படுகின்றது. ஆகையால் சிலர் அவ்வாறு பெறவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருக்கின்றது.

ஏனெனில் ஒரு பிள்ளையின் திருமணத்தை நடத்துவதற்குக் காணியின் முக்கியத்தும் எவ்வளவு என்பது அனைவருக்கும் தெரியும். அவ்வாறு அந்தக் காணியைப் பெற்றுக் கொள்வதென்றால் மரணச் சான்றிதழைத்தான் பெறவேண்டியிருக்கின்றது. அதனைப் பெற்றுக் கொண்டு திருமணத்தை நடத்திவைக்கவேண்டிய ஒரு நிலைமையும் இருக்கின்றது.

இவ்வாறு காணியைக் காரணம் காட்டி உறவினர்களுக்காகப் போராடும் மக்களுக்கு மறைமுகமான அழுத்தங்களை அரசு பிரயோகிக்கின்றது. எனவே உறவுகளை மீட்கப் போராடும் மக்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்களை அரசு விலக்கிக் கொள்ளவேண்டும்.

இதற்கமைய இந்த விடயத்தை ஜனாதிபதி மற்றும் காணாமலாக்கப்பட்டோர் செயலணியின் தலைவர் உள்ளிட்ட தரப்பினர்களுக்குக் கொண்டு சென்று அந்த மக்களைப் பாதுகாக்க வேண்டும் – என்றார். (ஐ-07)

## 8ஆம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டாபய அரசியலுக்கு வருவாரா, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரா என்ற நீண்ட இழுபறி அரசியலரங்கில் மட்டுமல்ல, பொதுஜன பெரமுனவுக்குள்ளேயும், ராஜபக்ஷ குடும்பங்களுக்குள்ளும் நீடித்து வந்தது. இந்த குழப்பங்களுக்கு மத்தியில் கோட்டாபய 8ஆம் திகதி மேடையேறவுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்வரும் 8ஆம் திகதி கண்டி பொதுச் சந்தைப் பகுதியில் பெரும் பேரணி ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் தேர்தல்களை இலக்கு வைத்தே இந்தப் பேரணி நடத்தப்படவுள்ளது.

கோட்டாபய தரப்பு ஏற்பாடு செய்துள்ள இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் நிறுவுநரான பஸில் ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். இந்தக் கூட்டத்திலேயே கோட்டாபய ராஜபக்ஷவும் மேடையேறவுள்ளார்.

இது தவிர, பொதுஜன பெரமுனவின் பிரமுகர்கள் அனைவரையும் மேடையேற்றும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

வாசுதேவ நாணயக்கார, குமார வெல்கம போன்றவர்கள் கோட்டாபய ஜனாதிபதி வேட்பாளராகப் பொருத்தமற்றவர் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றனர். அவர்களையும் சமரசப்படுத்தி ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக பொதுஜன பெரமுனவுக்குள் குழப்பங்கள் கிடையாது என்ற செய்தியை மறைமுகமாக அறிவிக்க ராஜபக்ஷ குடும்பத்தினர் திட்டமிட்டுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றும் மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ போன்றவர்கள் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபயதான் என்பதை நேரடியாக அல்லாமல் நாசூக்காகவே வெளிப்படுத்துவார்கள் என்றும் கூறப்படுகின்றது.

கோட்டாபய மீது நீதிமன்ற வழக்குகள் உள்ளன. இப்போதே ஜனாதிபதி வேட்பாளராக அவரைப் பகிரங்கப்படுத்தினால், வழக்குகள் இறுக்கப்படும் வாய்ப்புள்ளதாக ராஜபக்ஷ குடும்பம் கருதுவதாலேயே, நாசூக்கான இந்த நகர்வை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், அதை வெற்றி கொள்வதற்கு உஷார் நிலையில் இருக்குமாறு தொகுதி அமைப்பாளர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி பணிப்புரை விடுத்துள்ளது.

பழைய முறையிலேயே (விகிதாசார) தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி தரப்பில் இணக்கம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், அதற்கான சட்ட ஏற்பாடுகள் விரைவில் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

இதனால், பிரதான அரசியல் கட்சிகள் தேர்தல் களம் நோக்கித் தமது பார்வையைச் செலுத்தியுள்ளன.

குறிப்பாக ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம், மாவட்ட ரீதியில் கூட்டங்களை நடத்தித் தொகுதிகளைப் பலப்படுத்தி வருகிறார்.

முக்கிய சில தொகுதி அமைப்பாளர்களுடன், குருணாகலையில் நடைபெற்ற சந்திப்பின்போதே தேர்தலுக்குத் தயாராகுமாறு அவர் பணிப்பு விடுத்துள்ளார்.

இதன்படி புதிய தொகுதி அமைப்பாளர்கள் சிலர் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது குறித்து கட்சியின் மத்தியசெயற்குழுக்கூட்டத்திலேயே இறுதி முடிவெடுக்கப்படவுள்ளது.

அதேவேளை, ஆயுட்காலம் முடிவடைந்துள்ள மாகாணசபைகளில் உறுப்பினர்களாக இருந்த சிலருக்கு இம்முறை தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்படமாட்டாது எனவும் கதை அடிபடுகின்றது.

இதனால், தினந்தோறும் சிறிகொத்தவை நோக்கி உறுப்பினர்கள் படையெடுக்கின்றனர். கட்சி தலைவரையும் கடவுளாக மதித்து செயற்படுகின்றனர். பொது வெளியில் தலைவரை போற்றிப் புகழும் வகையில் உரை யாற்றி வருகின்றனர். (ஐ)

## கத்தோலிக்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றோம் என்று யாழ்ப்பாண மறைமாவட்டம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாண மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ப. யோ. ஜெபரட்ணம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

எமது இந்துமத சகோதரர்களின் மிகவும் பழமைவாய்ந்த, சரித்திரப் பிரசித்திபெற்ற திருத்தலமாக விளங்குகின்ற திருக்கேதீஸ்வரம் ஆலய வீதியில் அமைக்கப்பட்டிருந்த வளைவு ஒரு கத்தோலிக்க குருவின் வழிகாட்டலில் கத்தோலிக்க மக்களால் சேதமாக்கப்பட்ட நிகழ்வு பற்றி ஊடகங்களில் வெளியான செய்திகள் எமக்கு ஆழ்ந்த அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளன.

கத்தோலிக்கர் என்றவகையில் நாம் வெட்கித் தலைகுனிவதோடு எமது வன்மையான கண்டனத்தை யும் தெரிவிக்கின்றோம்.

தமது சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டுள்ள தருணத்தில் நடந்த இத்தகாத நிகழ்வினால் மனமுடைந்து காணப்படும் இந்து மத சகோதரர்களுக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றோம். எல்லா மதங்களையும், மதத்தவர்களையும் அன்பு செய்யவேண்டும், மதிக்கவேண்டும் என்றுதான் கத்தோலிக்க திரு அவை எமக்கு போதிக்கிறது.

இந்நிலையில் இச்செயலை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. தமிழர்களாகிய நாம் மதவேறுபாடுகளின்றி சகோதரத்துவத்தில் வளரவேண்டியது மிகவும் இன்றியமையாததாக இருக்கும் இந்நிலையில் இப்படியான வேண்டத்தகாத நிகழ்வுகள் எதிர்காலத்தில் நடைபெறாது இருக்கவும், நடைபெற்ற செயலுக்கு பிராயச்சித்தம் செய்யவும் சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டுமென்று விநயமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

இயேசுவின் வாழ்வாலும் போதனையாலும் நாம் பெற்றுக் கொண்ட அன்பு, மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு, தியாகம், புரிந்துணர்வு, சகோதரத்துவம், குழுமவாழ்வு ஆகிய எமது கத்தோலிக்க மதத்தின் அடையாளங்களை நாம் இழந்துவிடாமல் பாதுகாப்போம். இப்படியான நிகழ்வுகளால் எமது கத்தோலிக்க மதத்தின் பரிசுத்த தனத்துக்கு ஏற்படும் களங்கங்களுக்காக நாம் மனம் வருந்தி பிராயச்சித்தம் செய்யவேண்டும்.

தவிர்க்கமுடியாத காரணங்களால் மதங்களுக்கிடையே அவ்வப்போது ஏதாவது கருத்து வேறுபாடுகள் ஏற்படும் பட்சத்தில் ஆரோக்கியமான பேச்சுக்கள் மூலமாக அவற்றைத் தீர்த்துவைக்க முயற்சி செய்யவேண்டுமேயொழிய வன்முறைகளிலும், அடாவடித்தனங்களிலும் ஈடுபடவே கூடாது–என்றுள்ளது. (ஐ)

# திருக்கேதீஸ்வரம் வீதி வளைவு உடைப்பு; மன்னார் ஆயர் இல்லம் நேற்று விளக்கம்

மன்னார், மார்ச் 05

மாந்தை புனித லூர்து அன்னை ஆலயத்துக்கு முன்பாக - திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்குச் செல்லும் வீதியில் அமைக்கப்பட்ட வளைவு அப்பகுதியில் உள்ள கத்தோலிக்க மக்கள் சிலரால் உடைக்கப்பட்டமை குறித்து மன்னார் ஆயர் இல்லம் நேற்று விளக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளாரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

1. மாந்தை புனித லூர்து அன்னை ஆலயத்துக்கு முன்னால் சிவராத்திரி விழாவுக்காகத் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த அலங்கார வளைவுக்கு நல்லெண்ண அடிப்படையில் நல்லிணக்கப்பாடு இருந்தது. இந்த நிலையில் இதனை உதாசீனம் செய்வது போன்று புதிதாகவும், நிரந்தரமாகவும் அலங்கார வளைவை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், மாந்தை புனித லூர்து அன்னை ஆலயப் பங்குத்தந்தை கடந்த சனிக்கிழமை திருக்கேதீஸ்வரம் ஆலய பரிபாலன சபைச் செயலாளர் இராமகிருஷ்ணன் மற்றும் இளைப்பாறிய அதிபர் தயானந்தராஜா ஆகியோரோடுஓர்உரையாடலைமேற்கொண்டு ஏற்கனவே இருக்கும் தற்காலிக வளைவைப் பயன்படுத்துவதென்று கலந்துரையாடப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. இவ்வாறு இருக்க, மத நல்லிணக்கத்துக்கு எதிராகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் 75 பேருக்கும் மேற்பட்டவர்கள் கனரக வாகனங்கள், ஏற்கனவே பொருத்தி அமைக்கப்பட்ட இரும்பினாலான அலங்கார வளைவு, மற்றும் ஆயத்தம்செய்யப்பட்ட கொங்கிறீட் கலவை ஆகியவற்றைக் கொண்டு வந்து மாந்தை புனித லூர்த்து மாதா ஆலயத்துக்கு முன் பாக ஏற்கனவே இருந்த தற்காலிக வளைவைதாங்களாகவேஉடைத்து விட்டு புதிய வளைவை நிறுத்தி கொங்கிறீட் இட்டனர். அப்போது அங்கு நின்ற பொது மக்களுக்கும், நிர்மாணப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த குழுவினருக்கும் இடை யே பிரச்சினை ஏற்பட்டது.



இதன்போது அமைதியான முறையில் இதை அமைப்பது தொடர்பாகக்கலந்துரையாடமுற்பட்டபோது அங்கு வளைவு அமைக்க வந்த குழுவினர் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஊடகங்களில்தெரிவிக்கப்பட்டதுபோல எதுவும் இடித்து தகர்க்கப்படவில்லை. புதிதாக-பலவந்தமாக கொங்கிறீட் இட்டுப் போடப்பட்ட கம்பிகளே பிடுங்கப்பட்டன.

3. இந்தச் சம்பவம் நிகழும்போது எந்த ஓர் அருட்பணியாளர்களும் அந்த இடத்தில் இருக்கவில்லை. இவை அனைத்தும் நிகழ்வுற்று முடிவடைந்த நிலையில் மாந்தை தூய லூர்து அன்னை ஆலயப் பங்குத்தந்தை ஆலய வெளிவாயிலுக்கு வந்து பிரச்சினைகளை ஆராய முற்பட்டபோது அவருக்கு எதிராகச் சில பிரச்சினைகள் எழுந்தபடியால் அங்கிருந்தவர்கள் சிலர் இதனை ஆயர் இல்லத்துக்குத் தெரிவிக்க,செய்தி அறிந்தவுடன் சில அருட்பணியாளர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று மேலும் ஏற்படக் கூடிய அசம்பாவிதங்களைத் தடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

இவ்வேளையில் அங்கு வந்த பொலிஸார் நிலைமைகளை அவதானித்து இரண்டு பிரிவினரையும் அங்கிருந்து அகன்று செல்லும் படியும், தாங்கள் பிரச்சினைகளுக்கு முடிவு காண்பதாகவும் தெரிவித்தனர்.

4. தற்போது மேன் முறையிட்டு நீதி மன்றத்தில் மாந்தை தூய லூர்து அன்னை ஆலயம் அமைந்த காணி தொடர்பாக திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாக உறுப்பினர்கள் காலஞ்சென்ற நீலகண்டன், ராமகிருஷ்ணன் ஆகியோரால் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராகத் தாக்கல் செய் யப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்த வழக்கில் காணி எல்லை, திருக்கேதீஸ்வர ஆலய தற்காலிக அலங்கார வளைவு தொடர்பான விடயங்கள் தீர்மானிக்கப்பட வேண்டிய நிலையில் இவ் அலங்கார வளைவை அமைக்கப் புதிதாக முற்படுவது ஆரோக்கியமான விடயமல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

5. இந்த நிலைமையை அறிந்தவுடன் ஏனைய மக்களும், அருட்பணியாளர்களும் மீளவும் அங்கு ஒன்று கூடி மக்களை எந்த விதமான அசம் பாவிதங்களிலும் ஈடுபடாதவாறு அவர்கள் ஆலோசனை வழங்கிக் கொண்டிருந் தார்கள்.

6. இது இவ்வாறு இருக்க மீளவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 மணியளவில் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் இருந்து வளைவு கட்டப்படும் இடத்துக்கு மாந்தை மேற்கு பிரதேசசெயலாளர் கேதீஸ்வரனோடு வந்த குழுவினர் மீளவும் புதிய வளைவை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இவ்வேளை, மாந்தை மேற்குப்பிரதேச செயலாளர் கேதீஸ்வரன் கத்தோலிக்க மக்களுக்கு எதிராகக் கருத்துக்களைத் தெரிவித்து அங்கு குழுமி இருந்த கத்தோலிக்க மக்களை அச்சுறுத்திக் கொண்டிருந்தார். அவ்வேளை, அங்கு கடமையில் இருந்த பொலிஸார் செயற்பட்டு அனைத்தையும் மிகவும் சாதுரியமாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

7. கத்தோலிக்க திருச்சபை பல நெடுங்காலமாக அமைதி வழித் தீர்வையே விரும்பி வருகின்றது. கத்தோலிக்க திருச்சபையினர் ஒருபோதும் சமய நல்லிணக்கத்துக்கு எதிரானவர்கள் அல்லர் என்பதைத் தெரிவிப்பதோடு இப்புனித சிவராத்திரையை அனுஷ்டிக்கும் சகல இந்துக்களுக்கும்எதுவித இடையூறும் ஏற்படா வண்ணம் நடந்து கொள்ளுமாறும் தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்-என்றுள்ளது. (ஜ)

## 51 நாள் பிரதமர் பதவியால் நானும் பாதிப்படைந்தேன்

### மஹிந்த ராஜபக்ஷ கவலை

கொழும்பு, மார்ச் 05

ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி முதல் 51 நாள்கள் நாட்டின் பிரதமராக இருந்து அரசைக் கொண்டு சென்ற சந்தர்ப்பத்தில் தனக்கு அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டதாக முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மஹிந்த இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவ்வாறு அசாதாரண சூழ்நிலையை எப்போது ஏற்படுத்தினாலும் அதற்காக ஒருபோதும் கவலைப்படபோவதில்லை.

ஆனாலும் இந்த நாட்டைச் செழிப்படையச் செய்வதற்கும் மக்களின் வாழ்க்கையைச் சிறந்த முறையில் அமைப்பதற்கும் தொடர்ச்சியாக போராடுவேன்-என்றார். (ஜ)

## கிழக்கில் தமிழர்களின் இருப்புக்கு பேராபத்து

### எச்சரிக்கிறார் வியாழேந்திரன்

மட்டக்களப்பு, மார்ச் 05

எங்கள் இனம் இன்னொரு இனத்திடம் கையேந்தும் நிலையை நாமே ஏற்படுத்துகிறோம் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பு பேராபத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. இந்நிலையில் தமிழர்களை நேசிக்கின்ற தமிழ்த் தலைமைகளுடன் இணைந்து செயற்படுவதற்கு தயாராகவிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிழக்குமாகாணத்தில்தமிழர்களின் இருப்பானது பேராபத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. நல்லிணக்கம் என்ற பெயரில் தமிழர்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றனர்.

சிலருக்கு இதைச் சொல்வதற்கு பயம். காரணம் தங்கள் நல்லிணக்க உறவுகள் கெட்டுவிடும் என்பதாலாகும். தங்கள் உறவுகளைப் பற்றி மட்டுமே சிந்திக்கின்றனரே தவிர தங்கள் இனம் சார்ந்து சிந்திக்கின்ற தன்மை இல்லாமற்போய்விட்டது.

ஓர் இனத்தின் இருப்பைத் தக்க வைத்துக்கொள்வதற்கான நான்கு தூண்களாக இருப்பவை நிலம், மொழி, கல்வி மற்றும் பொருளாதார, பண்பாட்டு அம்சங்கள் போன்றவையாகும்.

இந்தநான்குதூண்களையும்நாங்கள் பாதுகாக்கவேண்டும். ஆனால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் நிலம், தமிழர்களின் கல்வி, மொழி, பண்பாடு, பொருளாதாரம் ஆகிய நான்கு தூண்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. தமிழர்கள் தங்கள் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்குப் போராடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணம் இன்று முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண அமைச்சராக நாட்டின் பிரதமரே இருக்கும்போது கிழக்கு மாகாணம் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது.



கிழக்கு மாகாணத்தையும் இங்குள்ள தமிழ் மக்களையும் வளங்களையும் எங்களது உயிருக்கும் மேலாக நாம் நேசிக்கின்றோம்.

எனவே, எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலானாலும் கிழக்கில் உள்ள தமிழர்களை நேசிக்கும் தமிழ்த் தலைமைகளுடன் இணைந்து செயற்படுவ தற்கு நாங்கள் தயாராகவிருக்கின்றோம். நான் பிரதேசவாதம் பேசவில்லை. ஆனால் எமது மாகாணம் பாதுகாக்கப்பட வேண்டும்-என்றார். (ஜ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள்
பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, மாநகரசபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
கிளிநொச்சியில் – இல.10, கண்டி வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (தம்றோ காட்சியறை அருகில்). 076 443 1576

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அச்சகத்தில் 05.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.